VI. XIO·44   1 Nov 1928

3L
007211, 1128 KX
N28·1·44.
189027

1010

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

20 NOV 1928

Vol 1.] 1928ஆம் நவம்பர்மீ 1உ [No. 44.

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	861	5.	தமிழ்ப் பாடம்.	870
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனுக்ஷிசுந்தரன் M. A., B. L.	863	6.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B.A.	872
3.	கல்லாடர் கண்ட கனு N. துரைக்கண்ணன்.	866	7.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A.,B L.	875
4.	மதிப்புரை "முருகன்"	868	8.	வர்த்தமானம்.	879

க லா நி ல ய ம்.

அரசியலும் அரவிந்தரும்.

V

18902

" இனி இவனே வஸீரா யிருக்கட்டும்" என்று மாண்டவன் பேரே இட்டுக் கொன்றவனைக் கொண்டாடும் பொதுஜனங்களின் ஆதரவைப் பெற வேண்டுமெனின், மெய்யும் தன் மனச்சாக்ஷியுமே துணையாய் விவகரிப்பவன் நெடுநாள் அவர்களுக்குத் தலைவனாய் இருந்துவரல் இயலாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரவல்லதோர் உண்மை யாகும். மற்று, நல்ல எண்ணமே தூண்டப் பொதுமன்றம் பயிலப் புகுந்தோர் தம் நிலை காக்கவேண்டி மெல்லமெல்ல, நேரிதும் அல்லாததுமான மொழிகளைப்புகலவும் செயல்களைப்புரியவும் நேர்வது புதுமையாமோ! ஒருவர் இருவர் அப்படிச் செய்ய, "இனி யோக்கியனுக்குக் காலம் கலிகாலமன்று" என்று மற்றவர்களும் அவ்வழியே பின்பற்றுகின்றனர். இவைகளைச் செய்வதில் பெரும்பான்மையோர்க்கு விருப்பம் இல்லை.

ஆயினும், ஒருத்தியின்பால் காதல்பெற நால்வர் நாடுவாராயின் இந்நால்வரும் ஒருவரையொருவர் அவளிடத்தில் பழித்துக்கூறுவதும், தத்தமின் சிறப்பை மிகுத்திக் கூறிக்கொள்வதும் இயற்கையே. அவளும் தன்னுடைய பெருமையை இருக்கும் அளவிற்கு மேற்பட்டே மதித்துக் கொள்வாள். இவ்விதம் ஒருவரையொருவர் பழிப்பதில் சிறிதும் விருப்பமில்லாமல், இந்நிலை வந்துற்றதே எனும் வெறுப்புடன்தான் அவர் அக்காரியம் செய்வார். மற்றொருவனுக்கு மாறாக மன்றாட வேண்டி நேர்ந்ததில்லை யாயின் வாய்மைகடந்த தற்புகழ்ச்சியும் வழங்கவேண்டா. தன்னையே அங்கீகரிக்க வேண்டுமென்று பொதுஜனங்களின் கடைக்கண் நோக்கம் பார்த்திருக்கும் ஒருவனது நிலையும் இன்னதே. காதலுற்றவன் செய்யும் செயல்களும் இயம்பும் மொழிகளும் பல, மற்றவர்களாலும், சிற்சில சமயங்களில் அக்காதலியினாலேயுங்கூடப் பரிகசித்தற் கொத்தனவா யிருக்கின்றன. எனின், அரசியல்வாதிகளைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் இயம்பிய மொழிகளை நாமிங்குக் குறித்தவைகளைக்கொண்டு ஆராயப் புகுங்கால் இவ்விஷயத்தின் முதலில்,

> "அப்பழிக்கு அவர்(அரசியல்வாதத் தலைவர்கள்) உரியவராதல் இழிபடு செயல்களை நயந்து செய்வதாலன்று. அது அவர் நிலைக்கே உரியது. ஒன்றுநினைக்க ஒன்றுவந்து சேர்கின்ற விபரீதம் அரசியல் வாதத்திலுமே நெறிபிறழாமல் நடப்பவர் மாட்டும் காண்கின்றோம். விலக்கரிய வகையில் இது அரசியல்வாதத்தி னூடே வியாபித்திருப்பதால் எத்தகைய மாண்புடையவராயினும் அவர் உலகோர் பழிக்கேனும் மறுதிறத்தோர் வசைக்கேனும் ஆளாகாதமைதல் ஆவதொன் றன்று."

என்று நாம் தொகுத்துக்கூறி ஆரம்பித்ததின் கருத்து யாதென விளங்கும். ஜனங்களின் சார்பாக முன்வருகின்றோம் என, அவர் விளம்பிப் புகுவதால் அவ்விளம்பரத்திற்கேற்ப அச்சனங்களின்

ஆதரவை நாடுவது அவசியமாவதும்; இந்த அவசியத்தால், பொதுவிஷயங்களில் பொறுப்புப் பெரிதுமின்றிக் கூறுவோர் வாயேகொண்டு அவர்தமை அளக்கும் இச்சனங்களைப் பகட்டால் தம்வயப்படுத்த முயல்வதும், இம் முயற்சியில் நேர்மை என்ற நெறியின் புறஞ்செல நேரிடுவதும், அதனானே நன்மை விளைக்கவென வந்த நிலத்தைச் சேறாக்கிக் கள்ளியும் முள்ளியும் நட்டு வளர்த்து அத்தூறிலே தாமே சிக்கி மாய்வதும் ஆகி உலகெங்கும் அரசியல் வாழ்க்கை நடைபெற்று வருவதைக் காண்பவ ராகின்றோம்.

இதுகாறும், தலைவர் ஜனங்கள் என்ற இருதிறத்தோரில் அச்சனங்கள், பொது ஜனங்கள் என்னும் பெயரிற் கிலக்காய்த் தம் தனிக்கருமங்களில் அல்லாது தமதினத்திற்குப் பொதுவாய கருமங்களில் தலையிட்டு விவகரிக்குங்காலையில், அவர்பால் தோன்றும் தன்மையைப்பற்றிக் கூறி அதன் காரணமாய்த் தலைவர் தம் வாய்மைநிலை தளர்ந்து உழல்பவராகின்றவண்ணம் இதுவென்று காட்டலாயினோம். இனித் தலைவராய் நின்று அச்சனங்களுக்கு நன்மை செய்துவைக்க நினைப்பார்தம் மனதின் இயக்கங்களையும் ஆராய்தல் அரசியல் வாழ்க்கை அடைந்துள்ள நிலையை விளக்குவதற்குச் சிறிது உதவி செய்யும். தற்காலம், பாலினுட் பிரைபோல் உலகெங்கும் பரவி மனிதரின் கருத்தைப் பொது ஜனப்பிரதான நோக்கமாகத் (democratic ideas) திரித்துவைக்கின்ற சில செய்திகளை யாவரும் அறிவர். நாட்டினை ஆளுதல் என்பது ஓர் ஊழியமேயன்றி அதிகாரம் அன்றென்றும், அவ்வூழியத்திலமர்ந்தவர் ஆளப்படுவோர்க்கு அடங்கி நடத்தலே முறையென்றும் கொண்டவொரு கொள்கையால் தோன்றிய நிகழ்ச்சி இது. இக்கொள்கைக்குக் கருத்தளவில் அடிப்படையாயிருப்பது மாநுடப் பிறவியில் ஒருவருக்கும் ஒருவரும் தாழ்ந்தவராகார் என்னும் நினைவு. இன்னவித கொள்கைகளும் நினைவுகளும் வாய்மையின் பாலவேயோ, மற்று மாயையின் தோற்றமேயோ என்று நாம் இங்கு ஆராயப் புகுந்திலம். எவர் பெரியர் எவர் சிறியர் என்னும் வினா எழுகின்றகாலையில் அதற்கு விடை, சந்தர்ப்பத்தைச் சார்ந்தே யல்லாது, அந்தரத்தில் வைத்துப் பகர்தல் பொருத்தமுடைய தாகாது. ஆதலின், சமத்துவக் கொள்கையின் தகுதியைப் பற்றி இங்கு யாதும் நாம் உரைக்காமல், அச்சமத்துவத்தைப் பாராட்டிப் புகட்டுவதாகப் புகல்கின்ற சில மக்களின் மனம் போகுமொரு போக்கினை மாத்திரம் கருந்துட் கொள்வது நன்று.

வலியோர் மெலியாரை வற்புறுத்தல் கொடுமையே. இக்கொடுமை நிகழாவண்ணம் வலியோரை மெலியோர் கூடி வதைத்துவிட்டால் பிறகு யாவரும் எங்கும் சமமாகப் பிறவிச் சுதந்தரங்கள் நிலைபெறச் சகோதரர்போல் வாழ்ந்துவருவது இயலுமெனும் எண்ணம் பிறக்கின்றது. வதைப்பதெனில் உயிர்வதையேயாதல் வேண்டுமெனும் அவசிய மில்லை. தம்முள் கட்டுப்பாட்டினாலும் சட்டத்தின் தடைகளாலும் வலியவர்எனக் கருதப்படுவோர்தம் செயலும் சொல்லும் செல்லாவகை ஒடுக்கிவிட முயல்வதே அவ்வெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதும். இம் முயற்சியை மேற்கொண்டவர், தாம் நினைத்தபடி ஜனங்களுக்குள் நிலைவேறுபாடு இல்லாதவகை மாற்றி உலகத்தைத் திருத்த வருங்கால், அத்திருத்தத்தைச் செய்துவைக்கும்பொருட்டுத் தாமே அதிகாரம் வகிக்கவேண்டியவர்க ளாகின்றனர் என்பதை மறந்துவிடுகின்றனர். முடிவுரை வரும்போது முதலிற்பாடிய பாயிரம் அயர்ந்தகல்தல் இந்நிலைக்கு இயற்கையாம். இது மாநுட மனதின் குறும்புகளில் ஒன்று. இதனையும் ஷேக்ஸ்பியரே புயற் காற்று (The Temhest) என்ற வேறோர் நாடகத்தில் காட்டியுள்ளார்:—

இந்திரஜாலம்வல்ல பிராஸ்பீரோ என்பான் ஒருவன் கடல்நடுவில் மனிதரற்ற ஒரு தீவில் வசித்திருந்தான். நேபில்ஸ் தேசத்தரசன் தனது பிரதானிகள் முதலாயினாரொடு ஒருசமயம் அத்தீவினிற்கு அருகே மரக்கலத்தில் செல்ல நேர்ந்தது. அப்பொழுது பிராஸ்பீரோ மந்திரத்தால் புயல் விளைத்து அவர்கள் சென்ற கப்பல் முழுகிவிட்டதுபோல் மாயஞ்செய்து, ஒரு காரணத்தை முன்னிட்டு அவர்களைத் தன் தீவில் கொணர்ந்து ஒதுக்கிக் கொண்டான். ஒதுங்கிய அவர் துயர்கூர்ந்து அத்தீவின் ஒருபுறத் திருந்தனர். அரசனது பிரதானிகளில் கன்ஸாலோ என்பவன் ஒருவன். இவன் தன் வேந்தனை வருத்திய மனக்கவலையைச் சிறிது ஆற்றும் வண்ணம் பற்பல பேசுவானாயினான். அப்பேச்சுக்களினிடையே கூறுவான்:—

> "வேந்தே, இந்தத்தீவின் ஆட்சி எனக்கு எய்தி நானும் அதற்கு அரசனாயிருந்தால் என்னவெல்லாம் செய்வேன் தெரியுமா.........ஜனவாழ்க்கையில் நான் யாவையும் தலைகீழாய் அமைப்பேன்: ஒருவிதமான போக்கு வரவிற்கும் நானிங்கு இடந்தரமாட்டேன்: நியாயாதிபதி என்ற பேர்கூட வழங்கப்படாது; கடிதம் என்பதே தெரியப்படாது; தொழில்கள் செல்வம் வறுமை இவைகளுக்கு இங்குக் காரியமில்லை. உடன்படிக்கையில்லை; தாயபாகம் இல்லை: நிலவரம்பும் உழுவதும் தோட்டமும் ஒன்றுமில்லை. உலோகம் தானியம் மது எண்ணை ஒன்றிற்கும் உபயோகமில்லை: ஒருவருக்கும் ஒரு வேலையும் இருத்தல் கூடாது: எல்லா மனிதரும் சோம்பேறி யிருக்கவேண்டும்; எல்லாரும், மாதர்களும் கூட; ஆனால் நிரபராதிகளாயும் தூயவர்களாயும் இருப்பார். அரசாட்சி இல்லை.".........

இப்படிக் கன்ஸாலோ சொல்லிவருகையில் அயலிலிருந்த ஸபஸ்டியன் (இவன் அரசனது தம்பி) அண்டோனியோ என்பவனுக்கு,

> "ஆனால், இவனே அதற்கு அரசனாயிருப்பான்" என்று ஒருபுறமாக எடுத்துக்காட்ட, அண்டோனியோ,

> "அவனது பிரஜாதிபத்தியத்தின் முடிவுதான் முதலை மறந்து விடுகின்றது"

என்று பரிகசித்தனன். இதன்மேல் நாம் இவர்கள் உரையாடியதைத் தொடர வேண்டா.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[846-ம் பக்கத் தொடர்ச்சி]

வேடர் வாடை வீசுதல்.

பேச்சும் பாட்டும் மாறிமாறி வருவதொன்றே அன்று, கண்ணப்பர் கதை வேடர்கதை யாதலினாலே, கதை முழுதும் வேடர் வாடை வீசுகின்றது. சுவர்வைத்துத் தானே சித்திரம் எழுதவேண்டும். மனமானது, உலகப் பொருள்களை உலகில் உள்ளபடி கண்டால்தான் அவற்றைமெய்யென நம்புகின்றது. இலைகளைத் தொடர்பின்றி வானில் தொங்குவதாக எண்ணுவது மனதுக்கு அருமை. தொடர்புள்ள பொருள்களினிடையே வைத்து மரமும் கிளையும் இலையும் பூவும் தோப்பும் துறவுமாக எண்ணுவது எளிதாகின்றது. மனதில் நன்றாக அவைகளும் பதிகின்றன. ஓவியம் எழுதுவோரும் வானம் மரம் கொடி மலை ஆறு வீடு மேடை முதலியவற்றைச் சார்விடமாகத் தீற்றுதல் காண்க. அவற்றினிடையே தாம் விரும்பும் மக்களை எழுதுகின்றனர். அதுபோலக் கதைகளும், தாம் சொல்லவந்த மக்களைச் சூழ்ந்துள்ள பொருள்களையும் அம்மக்களின் பழக்க வழக்கங்களையும் விரித்துரைத்தால்தான் உண்மையில் நடந்தவைபோல உயர்ந்து தோன்றுகின்றன. மெய்ப்பாடும் எழுகின்றது.

உள்ளோன் தலைவனாக இல்லது கூறியும், இல்லோன் தலைவனாக இல்லது கூறியும், இல்லோன் தலைவனாக உள்ளது கூறியும் வருங்கதைகள், செப்புலகைப் பொன்னுலகாக்கிப் புனைந்துரைத்து உலகிற் சிறந்த உண்மைகளை விளக்கி வருகின்றன. அதுபற்றி நக்கீரர் அன்பொழுக்கத்தை "இல்லது இனியது நல்லதெனப் புலவரான் நாட்டப்பட்டது" என்பர். "களவொழுக்கத்திற்கு இரண்டு திங்கள் எனக் காலவரையறை கூறியதுகொண்டு இவ்வாற்றானும் இஃது உலகியல்பு அன்றென்பது பெற்றாம்" என்கின்றார். "ஆறின்னாமையும் ஊறும் அச்சமும் தன்னை அழிதலும் கிழவோற்கில்லை" என்றார் இறையனார். அதனை விளக்கவந்த நக்கீரர் "இல்லதனையே இல்லை என்றார், இவன் உலகத்துத் தலைமகன் அல்லன், புலவரால் நாட்டப்பட்ட தலைமகனென்பதனை யாப்புறுத்தற்கு. உலகத்துத் தலைமகனாயின் இவையெல்லாம் இல்லாமை இல்லை என்பது" என்று மறுபடியும் தமது கொள்கையை நிலை நாட்டுகின்றார். மகள்வேண்டிச் சென்றவிடத்துத் தலைவியைப் பெற்றோர் அருமை பாராட்டுவதைக் கூறவந்தவர் "இனி உலகியலானும் அருகுப அல்லது உலகியல்பல்லாவழி இவர் அருகுபதற்குச் சொல்ல வேண்டுமோ" என்று தம் கருத்தை வற்புறுத்துகின்றார். "முற்படப் புணராத சொல்லின்மையிற் கற்பெனப் படுவது களவின் வழித்தே" என்பதை மொழிமாற்றுச் சூத்திரமாகப் பொருள்கொண்டு, புணராத முற்படச் சொல்லில்லை, என்று சொன்னமையாலே தம் கொள்கை வலிவடைகின்றதென்கின்றார். "இவ்வாற்றானும் உலகக் களவன்று என்பது பெற்றாம். உலகக் களவு புணராத முன்னும் சொன்னிகழ்ச்சி யுடைமையின், கற்புக் களவின்வழித் தென்னாது எனப்படுவதென்றது எற்றிற்கோ எனின், களவின் வழி நிகழாதேயும் உண்டு உலகக் கற்பு; இஃது இத்துணைச் சிறப்பின்றென்றதற்குச் சொல்லப்பட்டது" என்கின்றார். "துறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக் - கிழவிக்கில்லை தலைப்பெயலான்" என்பதையும் தனக்குப் பக்கத் துணையாகக் கொள்கின்றார். "அஃதியாங்ஙனமோ எனின், இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன். அவன் என்னினையதோர் குறையுடையான் போலும். அக்குறை இன்றியமையாமையான், அக்குறை முடித்தருளாயாயின் என்னைக் குற்றேவல் இழத்தி என, அதற்கஞ்சிக் குறை நேர்ந்து தலைமகள் தலைமகனை ஏற்றுக்கொண்டு கூடும் கூட்டம் இல்லை, வழக்கினுட் போல் என்பது" என்று தன் குறிவழக்கம்மிக எடுத்துரைத்துத் தானாட்டித் தனாது நிறுத்துகின்றார்.

நச்சினார்க்கினியர் இதனை மறுத்தெழுதுவர் "இப்புலனெறி வழக்கினை இல்லதினியது புலவரானாட்டப்பட்டதென்னாமோ எனின், இல்லதென்று கேட்டார்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலானும் உடன் கூறிய உலகியல் ஒழுக்கத்தினை ஒழித்தல்வேண்டுமாகலானும் அது பொருந்தாது" என்கின்றார். ஆனால் நக்கீரர் புனைந்துரையை நோக்கி அவ்வாறு கூறினாரே அல்லது முழுதும் இல்லவே கூறுகின்றது அகப்பொருட் கதை என்று கூறினார் அல்லர். "(தலைமகள்) நெருநலை நாளால் தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போன்றாள், என்னை. இனி யாரோடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலேபோல்வது உலகத்துதன்மை" என உலக இயல்பு கூறுதல் காண்க. தோழி மாறுகொள்ளாமைச் சொல்லுஞ் சொற்களைப்பற்றிக் கூறும்பொழுது உலகினோடு மாறு கொள்ளாமையைப் பற்றியும் கூறுகின்றார். கற்பெனப்படுவது களவின் வழித்தே, என்ற இடத்தும் உலகக் கற்பினைப் பற்றியும் உலகக் களவினைப் பற்றியும் கூறுவது காண்க. பெற்றோர் தலைவியின் அருமையைப் பாராட்டுமிடத்தும் உலகியல்பு கூறுகின்றார். பின்னும் "இருதிங்கட்புக இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளேயாய் இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாகச் செல்வதல்லது மற்றையன நிகழாது. உலகினோடு இத்துணைமாத்திரையே ஒத்து மற்றை விகற்பமெல்லாம் ஒவ்வாதெனக் கொள்க" என்பதையும் காண்க. முடிந்தது முடித்தலாக "ஒத்தொவ்வாதே யன்றே சொல்கின்றது என்பது" என்று உண்மையை விளக்கிவிட்டார். உலகத்தோடு ஒவ்வாததையே உரைப்பது ஒரு நூலாகுமா? "நாடக வழக்காவது சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்" என்கின்றார், இளம்பூரணர். அதற்கிணங்கப் பல இடங்களில் காணப்படும் அழகினை ஓரிடத்தில் கண்டதாகக் கூறுதலின் "இல்லது இனியது நல்லதெனப் புலவரான் நாடப்பட்டது" என்கின்றார். அதுவேயன்றி மற்றைப்படி நச்சினார்க்கினியரோடு நக்கீரர் மாறுபட்டவர் அல்லர். நச்சினார்க்கினியரும் இல்லது கூறுவதை உடன் படுகின்றார். "புனைந்துரைவகையாற் கூறுப, என்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோ எனின் உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க் குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந் தொழுகுதல் அறமெனக் கருதி நல்லோர்க்கு உள்ளனவற்றிற் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கேன்றே நாடகம் என்னாது வழக்கென்பா ராயிற்று என்பது. இவ்வதிகாரத்து நாடக வழக்கென்பன, புணர்ச்சி உலகிற்குப் பொதுவாயினும் மலை சார்ந்து நிகழுமென்றும், காலம் வரைந்தும், உயர்ந்தோர் காமத்திற்குரியன வரைந்தும் மெய்ப்பாடுதோன்றப் பிறவாறும்

கூறும் செய்யுள் வழக்கம்" என்பது காண்க. இவ்வளவும் கூறியதால் புனைந்துரையாகப் புகழ்ந்தாலும் உலகியலோடு சிறிதேனும் ஒத்திருக்குமாறுதான் உரைக்க வேண்டுமென்பது தெளிவாயிற்று. ஆகவே வேடர் கதை சொல்லவந்த சேக்கிழார் வேடர்களின் பழக்க வழக்கங்களை அறிந்து சொல்லுதலும் அமைவுடையதேயாகும்; மற்றொன்று விரித்தலாகாது.

நாட்டு வரலாற்றுக் கதைகள் என்ற ஒருவகை நூல்கள் ஆங்கிலத்திலே பல இருக்கின்றன. பழங்காலத்து வழக்க ஒழுக்கங்களை ஒருகதையின் வாயிலாக அறிவிப்பது அத்தகைய நூலின் நோக்கம். அக்கதைகள் இல்லோன் தலைவனாக உள்ளது கூறுவன, சில இடங்களில் உள்ளோன் தலைவனாக உள்ளதும் கூறுகின்றன. அந்தப் பழைய காலத்து நடையுடைகளை அறிந்து எழுத வேண்டுமாகையால் அவற்றை எழுதுவது எளிதல்ல. அருமையினும் அருமையாகும். அத்தகைய நூல்களில் தலைசிறந்து விளங்குவது எஸ்மாண்ட் என்றதோர் ஆங்கிலக் கதை. தாக்கரே என்ற பெரியார் 18-ஆம் நூற்றாண்டின் பழக்கவழக்கங்களை அதில் நன்கு விரித்துரைக்கின்றார். அந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் எந்த ஆங்கில நடையில் பேசி எழுதிவந்தார்களோ அந்த நடையிலேயே அந்தக் கதையை அருமையாக எழுதியுள்ளார். ஆனால் அதற்குப் பிறகு வேறுகாலத்தில் நடந்த வேறு கதைகளை எழுதத் தொடங்கியபொழுதும் அதே நடைதான் வந்தது. அதிலே மூழ்கி அதோடு ஒன்றாய் விட்டபடியால் அதினின்றும் தப்பிப் பிழைப்பது முடியாதாய்விட்டது. அந்த நடையே அவருக்குப் படிந்துவிட்டது. அதனை மாற்றிக்கொள்ள அவ்வறிஞராலே இயலவில்லை. ஆனால் சேக்கிழார் இவ்வேடர் கதையைப் பாடியபிறகும் வெவ்வேறு நடையில் பல வேறு கதைகள் எழுதியுள்ளார் என்றால் அவர் பெருமையை என்ன என்பது? அதனாலல்லவா அவரைத் தெய்வப் புலவர் என்பது?

தாம் புனைந்துரைக்கப் புகுந்தவர்களது நடையும் உடையும், மொழியும் வழியும் அப்படியே தமது உள்ளத்தில் பதியுமாறு அறிந்து உணர்வது எவ்வளவு அருமை! ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாட்டுத் தெய்வப் புலவர் "புயற் காற்று" என்ற ஒரு கூத்து நூல் எழுதியுள்ளதன் தொடக்கத்தில் கப்பலோட்டிகள் கலந்து பேசிக் காலங் கழிப்பதனை, அவர்கள்தாம் இப்பொழுது நம்மெதிரில் வந்து பேசுவதுபோலப் புனைந்துரைத்துள்ளார். எத்தனை நாள் இந்தக் கப்பலோட்டிகளோடு இப்பெரியார் பழகி யறிந்து இம்மொழிநடையை உணர்ந்தாரோ என்று இந்நூலை ஆராய்வோர் வியந்து பாராட்டுகின்றனர். அதுபோலவே, சேக்கிழாரது கண்ணப்பர் கதையைப் படிக்கும்போதும் படிக்கக் கேட்கும்போதும் சேக்கிழார் வேடர்குடியிற் பிறந்தவரோ புகுந்தவரோ என்று ஐயம் எழுகின்ற தன்றோ?

"பொச்சையில் நறவும் ஊனின் புழுக்கலும்
உணவு கொள்வார்"
"மச்சிது செய்தார் யாரோ"
"பயில் விளியால் கலை யழைத்து"
"ஏடி எறிந்து வார் ஒழுக்கி"
"வக்குவன வக்கு வித்து"
"எண்ணில் பார்வை கொண்டு வேடர்
எம்மருங்கும் ஏகினர்"

என்று வருவன வற்றில் வேடர்வாடை வீசவில்லையா? இவற்றில் அவர்களது பேச்சின் எதிரொலியை நாம்கேட்கவில்லையா? பொச்சை என்றும் புழுக்கல் என்றும் பயில் என்றும் பார்வை என்றும் மச்சு என்றும் வக்குவன என்றும் மிகவும் வழங்குவது வேடரே யன்றோ? வேடர்கள் பேசுவது போலவே காடனும் நாணனும் பேசுவதை முன்னரே உணர்ந்து மகிழ்ந்தோம். நாணன் வேடர்கள் விரும்பும் உடும்பினையே சிறந்த உவமையாக எடுத்துரைத்தான். காடனும் கள்வரிற் சிறந்த வேடர் போலவே பேசிப் போயினன். "இதோ பன்றி, நீங்கள் வைத்தது வைத்தபடியே இருக்கின்றது. நான் ஒன்றும் தொடவில்லை. வேண்டுமானால் இந்தப்புறமும் அந்தப் புறமும் தேடிப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி வந்தவரை எதிர்கொண் டழைத்தான்.

அவர்கள் பேசிய பேச்சினைப் பேசுவதோடு அவ்வேடர்களது பழக்கவழக்கங்களையும் நன்றாக அறிந்துணர்ந்து புனைந்துரைக்கின்றார். வேடர்களது பழக்க வழக்கங்களை நாமறிவதற்காகவே இந்நூலை எழுதினாரோ என்று எல்லோரும் ஐயம் கொள்ளுமாறு இந்நூல் அமைந்துள்ளது. குறவர்கள் தமது குடிமுதற் கடவுளாகிய முருகப் பெருமானைக் கும்பிடுவதைக் கூறுகின்றார். மருள் ஆடவைத்து மனக்குறை தீரக் குறி கேட்பதனையும் குறிக்கின்றார். பொரியும் தசையும் தேனும் கள்ளும் உணவும் கொண்டு பலியிடுகின்ற வழக்கத்தினையும் சுட்டிக் காட்டுகின்றார். கடவுட் பொறையாட்டி தன்னை வணங்கியவரை வாழ்த்தும்போது அரிசியும் பூவும் மேலிறைத்து வாழ்த்துவதனையும் விளக்குகின்றார். குழந்தை பிறந்ததும் அதற்குப் பெயர் வைப்பது எந்த வகையால் என்பதனையும் விரித்துரைக் கின்றார். பெற்ற தந்தை பிள்ளையைக் காணவந்து, கையில் ஏந்துகின்றான், அதுபோது அப்பிள்ளையைப்பற்றி அவனுக்கு என்ன தோன்றுகின்றதோ அதுவே அக்குழந்தையின் அரும் பெயர் ஆகின்றது. கண்ணப்பரை நாகன் கையில் ஏந்துகின்றான், திண் என்று இருத்தலின் திண்ணன் என்று பெயரிடுகின்றான்.

அண்ணலைக் கையி லேந்தற்
கருமையால் உரிமைப் பேரும்
திண்ணனென் றியம்பும் என்னத்
திண்சிலை வேடர் ஆர்த்தார்.

இனி இவ்வேடர்கள் அணிந்து வனைந்த ஆடையினையும் அருகிருந்து கண்டறிந்தார்போலப் புகழ்கின்றார்.

தாளில்வாழ் செருப்பர்தோல் தழைத்தநீடு தானையர்
வாளியோடு சாபமேவு கையர்வெய்ய வன்கணர்
ஆளியேறு போலவேகு மண்ணலார்முன் எண்ணிலார்
மீளிவேடர் நீடுகூட்ட மிக்குமேலெ ழுந்ததே.

காலில் செருப்பு, தோலுடைப் போர்வை கையில் வில்லும் அம்பும், அவர்களது அணியும் ஆடையும் அரும் படைக்கலனும் அத்துணையே. குடிகளாகிய இவர்கள் பூண்ட கோலத்திற்கும் இவர்களது அரசர் பூண்ட கோலத்திற்கும் வேற்றுமை காண்க.

மேலும், அவ்வேடர்கள் விற்றொழில் கற்பிக்கத் தொடங்குகையில் இயற்றும் எல்லாச் சடங்குகளையும் ஒன்று விடாமல் உரைத்துப் போகின்றார். வில்லுக்கும் பிடிக்கும் பிள்ளைக்கும் புலி நரம்பில் காப்புக் கட்டுவது, அன்றுதொட் டேழுநாள் உண்டாட்டமொடு கொண்டாட்டம். ஏழாம் நாள் ஊர்வலம். அன்றைய நடுப்பகலில் பிடிப்பது என்ற இவற்றை எல்லாம் இனிதே எளிதிற் புனைந்துரைத்துப் போகின்றார்.

சிலையினைக் காப்புக் கட்டுந்
திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னாண்
நாகனார் பயந்த நாகர்

குலம்விளங் கரிய கன்றின்
கோலமுன் கையின் சேர்த்தி
மலையுறை மாக்கள் எல்லாம்
வாழ்த்தெடுத் தியம்பி னார்கள்
வெங்கதிர் விசும்பின் உச்சி
மேவிய பொழுதில் எங்கும்
மங்கல வாழ்த்து மல்க
மருங்குபல் லியங்கள் ஆர்ப்பத்
தங்கடொன் மரபின் விஞ்சைத்
தனுத்தொழில் வலவர் தம்பாற்
பொங்கொளிக் கருபோ ரேற்றைப்
பொருசிலை பிடிப்பித் தார்கள்
பொற்றட வரையின் பாங்கர்ப்
புரிவுறு கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தில் நண்ணி
விதிமுறை வணங்கி மேவும்
அற்றைநாள் தொடங்கி நாளும்
அடற்சிலை ஆண்மை முற்றக்
கற்றனர் என்னை ஆளும்
கானவர்க் கரிய சிங்கம்.

கன்னி வேட்டையாடக் காடு புகுமுன் கடவுட் பொறையாடி காடுபலி ஊட்டுவதனையும் காட்டுகின்றார். வேட்டையாடக் காட்டிற்குள் போகும் முன்னாள் இரவு தன்னந்தனியே தூய இடத்தே துயின்றெழுந்து தூய நீர் ஆடிப் போகுவதோர் ஒழுக்கத்தினையும் உணர்ந்திருந்தார்.

செங்கண்வயக் கோளரியே றன்ன திண்மைத்
திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண்விறற் றாதைகழல் வணங்கி நின்று
விடைகொண்டு புறம்போந்து வேட ரோடு
மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி
வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப்
பொங்குசிலை அடல்வேட்டைக் கோலங் கொள்ளப்
புனைதொழிற்கை வினைஞருடன் பொலிந்துபுக்கார்,

என்பது காண்க. முடிசூடும் முறை முழுதினையும் மொழிகின்றார். வேடரது அரசர் ஏறும் அரிமாக்கட்டில் புலித்தோல் இருக்கைதான். அப்புலித்தோலின்மேல் வீற்றிருந்து உடைதோலும் சுரிகையும் கைக் கொள்வதே முடிசூட்டுத் திருவிழா. உடைதோலும் சுரிகையும் அணிந்து விளங்குவதே அரசன் என்பதற்கோர் அறிகுறி. அரசன் தனது பிள்ளைக்கு முடி சூட்டுவது, அவ்வூர் வேடர் அனைவரும் ஒன்றுகூடி உடன்பட்டபின்னரே என்பதனையும் எடுத்துக் கூறுகின்றார்.

அவர்கள் உண்ணும் உணவினையும், அணிந்து கொள்ளும் ஆடையினையும், புனைந்துகொள்ளும் பூண்களையும் ஒன்றின்பின் ஒன்றாகக் கோவைபடுத்திக் கூறுகின்றார். புலிப்பல் தாலியும் பலகறையும் சங்குமணியும் யானைக்கொம்பும் மணியும் கோத்து மாலையாக அணிந்து கொள்வதனைப் பல முறையும் குறிக்கின்றார். இளந் தளிர்களைப் படலை மாலையாகத் தலையில் சூடிக்கொள்வதனை நினைப்பூட்டுகின்றார். சிறு பொழுதிலே தலையில் புலியின் உகிரைச் சுட்டியாகச் சாத்தி, இடையிலே வேப்பம்கொட்டையையும் பலகறையையும்கோத்து அரைஞாணாக அணிந்து கொள்வதனையும் அழகுபட விரித்துரைக்கின்றார். கழலையும் செருப்பையும் காலிலும், கைச்செறி கட்டியையும் காப்பினையும் கையிலும் அணிந்து போவதையும் குறிக்கின்றார். அரையில் தோலுடை அணிந்து அதன்மேலே மயிற்பீலியைப் பரப்பிவைத்துக் கச்சால் இறுகக் கட்டி அதிலே கத்தியினைச் செருகிவைப்பதனைப் புனைந்துரைக்கின்றார். மயிற்பீலியின் அடிப்புறத்தில் அழகிய குன்றிமணிகளை அழுத்திப் பதித்து, அம்மணிகள் வெளியில் விளங்குமாறு வைத்து, மயிரோடு முறுக்கித் தலையில் கட்டிக்கொள்வதனையும் கண்டது கண்டபடி கழறுகின்றார். அவ்வேடர்கள் பொச்சையின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவு கொள்வதனை உணர்த்துகின்றார். குழந்தைகளுக்கு ஊனுணவு ஊட்டுவதனையும் உரைக்கின்றார். அவர்கள் உண்பனவற்றில் ஒன்றேனும் விட்டார் இல்லை.

ஐவன அடிசில் வெவ்வே
றமைத்தனர் புற்பாற் சோறு
மொய்வரைத் தினைமென் சொன்றி
மூங்கில்வன் பதங்கண் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக்
கலந்தவூன் கிழங்கு துன்றச்
செய்வரை உயிர்ப்ப எங்கும்
கலந்தனர் சினவில் வேடர்

செந்தினை இடியும் தேனும்
அருந்துவார் தேனிற் றோய்த்து
வெந்தஊன் அயில்வார் வேரி
விளங்கனிக் கவளங் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி
நசையொடும் மிசைவார் வெவ்வே
றந்தமில் உணவின் மேலோர்
ஆயினார் அளவி லார்கள்.

மலையரிசிச் சோறும், பாலில் சமைத்த புல்சோறும் மூங்கிலரிசிச் சோறும், இறைச்சியும், கிழங்கும், தேனும் தினைமாவும், விளங்கனியும் எல்லாம் கூறுகின்றார். உள்ளது உள்ளபடி ஒக்காளம் வரவும் உரைத்துப் போகின்றார். ஈயல் தின்பதனையும் ஒரு முறைக்கு இருமுறை மறவாது கூறிப்போகின்றார். பின்னர்க் கடவுட் பொறையாட்டியை "மென்றசையும் ஈயலோடு நறவும் பெற்று வாழ்வேன்" என்று பேசவைக்கின்றார். தசையைச் சுட்டுத் தேனிற் றோய்த்துத் தின்பதனைச் சிறப்பித்துப் பேசுகின்றார். தாம்பேசார், அதனுயர்வை உண்டுணர்ந்து கண்டறிந்த கண்ணப்பரையே பேசிப் புகழ்ந்து பாடவிடுகின்றார். T. P. மீனாக்ஷிசுந்தரன்.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய
கந்தபுராண வெண்பா
ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.
இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. ஆறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.
விலை ரூ. 4-8-0 வி. பி. சார்ஜ் வேறு.
மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

கல்லாடர் கண்ட கனா.

இங்கிலாந்து நாட்டிலே கி. பி. 1775-ஆம் ஆண்டில் பிறந்த ஆசிரியர் வால்ட்டர் சாவேஜ் லாண்டார் (Walter Savage Landor) என்னும் பெரும் புலவர் இயற்றிய (Imaginary Conversations) என்னும் கற்பனைப் பேச்சுக்களில் ஒன்றான, 'மார்க்கஸ் டல்லியஸ் சிசரோவும் குவின்க்டஸ் சிசரோவும்' (Marcus Tullius and Quinctus Cicero) என்பதிலுள்ள 'கிரைடாபுலஸ் என்னும் கிரேக்கரின் அறவுரை' (The apologue of Critobulus) என்னும் உரைக்கோவையைத் தமிழோடு நெருங்கி இயைபுறும்படி தழுவிக் கல்லாடரது அறவுரையாகப் புனைந்துரைத்தும் ஒன்றிரண்டு இடங்களில் தமிழ்க் கதைகளை மேற்கொள்வதாகத் திரித்தும் இக்கட்டுரை வரையப் பெற்றிருக்கின்றது.

சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனூர்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத் தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண் நான் அலைந்துகொண்டிருக்கும் ஞான்று, திடீரென்று குண்டுபடு குட்டமொன்றன் மருங்கு வந்துற்றேன். பளிங்குபோன்று தெளிந்த நீர்நிரம்பப் பெற்றிருந்த அக்குட்டத்தின் நாப்பண் அல்லிக் கொடிகளும் தாமரைக் கொடிகளும் வெண்ணிற மலர்களையும் செந்நிற மலர்களையும் தாங்கி நின்றது என் நினைவிற்கு வருகின்றது.

அதுபோழ்தத்துத் திடுமென என் பின்னிருந்து கழிபெருங் கவின்வாய்ந்த வடிவமொன்று தோன்றி, எனக்கும் குட்டத்திற்கும் இடையே திகழ்ந்து நின்றது. எனக்கு யாதொன்றும் தோன்றவில்லை. அவ்வுருவத்தின் இளமையான தோற்றத்தாலும், அதன் முன்னர் நீர்நிலை இருந்ததாலும் அவ்வடிவம் எப்பகுதியின்பாற் பட்டது என அறியவும் இயலவில்லை. பளிக்கறையில் நின்ற மணிமேகலையே என்ன விளங்கிய அவ்வடிவம், சிறிது ஒல்கிப் புனலை உற்றுப் பார்த்து மயிலையேய்த்த தன் சாயலை நோக்கியவண்ணம் இருந்தது. பிறகு காம்பொடிந்த பசிய கொடியொன்று தலைகவிழ்ந்து வளைவதுபோல் அவ்வுருவம் தன் மெல்லிய இயற்கையோடு குனிந்து, மணமும் அழகும் சிறிதாகவுள்ள சில மலர்களை யெடுத்துத் தன்னை யலங்கரித்து, தனது செவ்விய சீறடிகளால் மிதிபட்ட பூக்களிடம். அவைகள் தனது அடிகளுக்கு மென்மையா யிருப்பதைக் குறித்து, விழைவும் அன்பும் கொண்டதாகத் தோன்றியது. அவ்விதம் செய்தபின்னர் அவ்வடிவம் என்புறமாகத் திரும்பி, குறிப்பில்லாததும் வெறுப்பு விருப்பு இல்லாததுமான தோற்றத்தோடு என்னை நோக்கிற்று. இப்போதுதான் அஃது ஓர் பெண்ணென நான் அறிந்தேன்.

அவ்விதம் மழைபொரு கண்ணிணை மடந்தையென அறிந்ததும், நான் இதுகாறும் கொண்டிருந்த ஐயம் நீங்கி இறும்பூது எய்தினேன். அழகெலாம் ஒருருவாய்த் திரண்டு வந்தாலெனத் திகழும் அம்மங்கையைக் காணக்காண எனக்குக் காதல் மேலிட்டுத் தியக்கம் உண்டாயிற்று. என் நிலையை உணர்ந்த அப்பெண்ணரசி புன்முறுவல் பூத்தாள். கொல்லும் வேலுங் கூற்றமுமென்னு மிவையெல்லாம் வெல்லும்வெல்லும் என்ன மதர்க்கும் விழிகள் சாந்தத்தை விளக்கிநின்றன. நான் அவளைக்கண்டு இத்துணை மாறுதலடைந்தேனெனினும், என்னைக் கண்ணுற்றதனால் அவள் யாதொரு மாறுபாடும் அடைந்ததாகக் காண்கிலள். சதுரப்பாட்டினால் அவ்வோவியப் பாவையன்னாளை எளிதில் வயப்படுத்தலாம் என்று எண்ணக்கூடிய குறிப்பும் அவளிடம் யான் கண்டேனில்லை. அவ்வனிதையது முகம் உயர்வானில் ஏகும் ஒளி நிறைந்த ஓர் மேகத்தின் வண்ணமே எனத் தோன்றும்படி அத்துணை உயரிய விருப்பமான நிறத்தால் மிளிர்ந்தது. குன்றுஞ் சுவருந் திண்கல்லும் புல்லுங் கண்டு உருகப் பெண்கனியாக அவள் திகழ்ந்தாலும், வினைசெய்தற்கண் தளராமுயற்சியுடையாளென அவள் இருந்த தன்மையிலிருந்து எனக்குப் புலனாயிற்று. ஆயினும் இதுபோழ்து அவள் ஓய்வு கொண்டிருக்க விழைவுற்றிருக்கின்றாளென நான் அறியலானேன்.

அதுநிற்க, மங்கையர்க்கினியதோர் மருந்தாய அப்பொற்பாவையைக் கண்ணுற்றபோதே என் மனமானது அவளது செங்கமலமன்ன சீரடியிற் சென்று ஒன்றியது. கண்வழி புகுந்த காதனோய் பாலுறு பிரையென என் உடலமெங்கணும் பரந்தது. காதொடு குழைபொரு கயற்கண்களையுடைய அப்பெண்ணமிழ்தத்தைப்பெறுதலின்றி நான் ஓர் கணமும் உயிர்வாழ முடியாத நிலையை யடைந்தேன். இந்நிலையில் என் சிந்தை அவள்பாலே செல்ல உந்தியதால் நான் சிறிது அவளிடம் அண்மி அவளது செங்காந்தளன்ன கைகளைப் பற்ற நினைந்தேன்.—ஆ! பற்றியு மிருப்பேன்.—அதற்குள் அவள் என்னைக்கூர்ந்த நோக்கினொடு பார்த்தனள். அப்பார்வை, 'சிறிது பொறு; பார்க்கலாம்' என்று நவில்வதுபோன்றிருந்தது. அதன்முன் என் ஆண்மை என்படும்? அவள் என்னைக் கருணைகலந்த நோக்கொடு பார்த்த அத்தெய்வப் பார்வை வேறெந்த ஆண்மகனுக்கும் கிடைத்திருக்க முடியாது என உறுதியாய்க் கூறுவேன். இவ்வாறு நான் எண்ணியதையே அவ்வணங்கனாளிடம் பகர்ந்தேன். அதற்கவள், 'உன் மொழி மிக இனிமையாக இருக்கின்றது.' என இறை இறுத்தாள்.

குழலினும் யாழினும் மிக்க இனிய குரலோடு கோகிலம்போல் மிழற்றிய அவள் மாற்றத்தைச் செவியுற்ற யான் அவள் ஆழ்ந்த அறிவில்லாதவள் என்றும், முகநய இச்சையுடையவள் என்றும் எண்ணி அவளைப் பலபடப் புகழலானேன். உடனே அவள் தன் மதிமுகத்தைத் திருப்பிக்கொண்டு மறுமொழி ஒன்றும் தாராதிருந்தனள். நான் பொறுக்க முடியாத எனது காதலை வெளியிட்டேன். அவ்வெழில் மிக்க மாதராள் தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பிப் புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சில அடிகள் அப்புறஞ் சென்றாள். ஆ! என் இன்னுயிரே உடலை விட்டு நீங்குகின்றதெனப் பதைபதைத்தேன். 'என் அருமைப் பெண்ணரசியே! உன்னை ஒரு முறை கண்ணுற்ற ஆடவனொருவன் பிறகு கோமளக் கொழுந்தாய உன்னையின்றி உயிர்வாழ்வானோ! முடியாது! முடியாது!! ஆதலால் தெய்வமே! எனக்கு அன்புகூர்ந்து காட்சியளித்த நீ என்னை விட்டுப் போதல் நீதியேயோ!' என்று அலறினேன். இவ்வென் உறுதிமொழியைக் கேட்டும் அவள் மனமிரக்கமிலாதாள்போல் மேலுஞ் சில அடிகள் பெயர்ந்து சென்றாள். 'அழியாத் தெய்வங்கள்மேல் ஆணை. நீ

என்னைவிட்டுப் போதல் அடாது' என்று நான் வருத்தத்துடன் மொழிந்தேன். இச்சொல்லை அவள் செவியுற்றதும் என்புறம் திரும்பி அருளொடு பார்த்தனள். பிறகு தன் தலையை அசைத்தாள். 'அவ்விதமானால், நீ வேறொருவனுக்கு உரியவளோ! அதைச் சொல்! அதைச் சொல்!! அவ்வார்த்தையை உன் செங்குமுதமன்ன வாயினால் ஒரு முறை உரைப்பாயாக! அக்கணமே நான் இறந்து படுகின்றேன்!' என்று நான் முன்னையினும் உரத்துக் கூவினேன்.

கார்மயிலன்ன ஒடுங்கிய சாயலையுடைய அப்பெண் முன்னையினும் அதிக விசனக்குறிப்போடு இளநகை இயற்றி, 'ஓ! கல்லாட! உண்மையில் நான் பிறன் ஒருவனுக்கு உரியவளே. நான் கடவுளுக்குடையவள்' என்று இனிமையுடன் இயம்பினாள்.

அவ்விதம் அவள் சொல்லிவரும்போது மேலுலகத்திலிருந்து ஓர் காற்று வந்து என்னை ஊடுருவிப் பாய்வதேபோல் இருந்தது. அதை விளங்கக் கூறவேண்டுமானால் விண்ணுலகத்தின் அளப்பரும் உயர்வு கட்புலனாகி, அதுகாறும் நினைத்தறியக்கூடாத எனது இழிவை நான் உணர்ந்து வருந்தச்செய்தது என்னலாம். மேலும் ஆத்திரமுடையவர்கள் நடுங்குவதுபோல் நான் மெய்விதிர்ப் புற்றேன். சிறிது நேரங் கழித்து, 'இதை நான் முன்னரே எண்ணியிருக்கலாம்; பிழைத்தேன். என் செய்வேன் ஏழையேன்! அவ்வாறானால் ஏன் என் முன்னர்க் காட்சிதந்து என்னை வருத்தல் வேண்டும்.' என நான் அறை கூவினேன்.

இவ்வாறு யான் அலக்கணுற்று வருந்தி யிருந்தேனாக, சிறிதுகழித்து இரதியே யன்ன காரிகை என்னோடுவிளையாடவும், வேடிக்கை செய்யவும் துவக்கி, அவளது இளம்பருவத்துக்கு ஏற்றதென்னலாமே யன்றி, அவளது * உறுதிக்குப் பொருந்தாத வண்ணமாக என் கையை நாணங் காட்டாமலே அவளது மடிமீதுள்ள மலர்களின் மேல் வைத்தனள். ஆ! அஞ்ஞான்று நான் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. யாக்கையோடு துறக்கஞ்செல்லும் ஒருவனேபோல் ஆயினேன். அக்கணத்தில் என்னிடத்துதித்த வேட்கையை, எங்கள் அருகேயுள்ள குட்டத்திலுள்ள நீர் முழுவதுங்கூடத் தணிக்க இயலாது.

இங்ஙனம், யாங்கள் இருவேமும் அளவளாவி உரையாடி யிருந்தேமாக, அவ்விளமரக் காவிலுள்ள குயில் முதலிய பறவைகளின் ஒலியும், இவ்வெழிலணங்கின் தீங்குரலின் ஒலியும் முழுப்பெருக்கும் கூர்மையும் உள்ள ஒளியில் நிறந் தெளிவில்லாமல் இருப்பதுபோல் என் செவிகளுக்குக் கலப்புடையனவாய்க் கேட்டனவே தவிர, இளங்காற்றின் ஒலியுமின்றி யிருந்தது. அழகுக்கு உறைவிடம் போன்றாள் எனக்கு மகிழ்ச்சி பொருந்திய பல சங்கதிகளைப் பகர்ந்தாள். எனினும், என் உள்ளம் அவ்வனிதையின் உறுப்பு நலங்களிலேயே பதிந்து இருந்ததால் அவள் சொல்லியவற்றின் முற்பாகமும் பெரும்பகுதியும் ஆனவற்றை அறிந்தேனில்லை. ஆனால் நான் தெளிவாய்க் கேட்க முடிந்து, என் கருத்தை ஈர்க்கத்தக்க சில சொற்கள் குமுதமன்ன வாயிலிருந்து வரலாயின. அந்தக்காலை அவள், என் தலையிலிருந்து மெல்லிய வெள்ளிக் கம்பிகளைப் போன்று நீண்ட நரைத்த மயிர்களைக் களையத் தொடங்கி, மற்றவைகளுடைய நிறமும் அவ்வளவு விரும்பத் தக்கதாகவில்லை என்றும், உடலுறுப்புகளின் அமைப்புகளும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு குறைபாட்டை உடையதாகவே யிருக்கின்றதென்றும், தெரிவித்தாள்.

* உறுதி - கனவொழுக்கம்.

அக்கணத்தில் என்னுடைய நிலை எவ்வாறு இருக்குமென்று எண்ணுகிறீர்கள். அன்பர்களே! ஓர் பெண் - எல்லா நலங்களும் ஒருங்கே யெய்தப்பெற்ற வனிதை - அதனிலும் தான் விரும்பிக் காதலிக்கும் பெண் - என்னைப்பற்றிக் குறைபாடாக - அதாவது உறுப்பமைப்புகளும், முகவசீகரமும் உடல் திண்மையும் அவ்வளவு விரும்பத் தக்கனவாக வில்லையென்று-சொல்வாளானால் அதைக் கேட்டு எந்த ஆண்மகனாவது சகிப்பானா? வெட்கமுறாம விருப்பானா? ஆகவே அவள் என் குறைபாட்டை யெல்லாம் எடுத்தியம்பவே என் உள்ளம் மாழ்கியது. நான் பெருஞ் சலிப்பெய்திக் 'கவினுறை கருவூலமே! நீ கடவுளிடம் பழகினவள்; நீ அவ்வணந்தான் நினைப்பாய். ஆனால் இம்மண்ணுலக மக்களுள் நான் உறுப்புக் குறைவுள்ளவன் என்றாவது அழகில்லாதவன் என்றாவது சொல்வதற்கில்லை' என்று கழறினேன். என் முகம் வெட்கத்தால் வெண்டாமரையாய் வெளுத்து வியர்வை தாளமென்ன அரும்பியது. ஆயின் அவ்வானரமகள் என் மொழிகளையாவது எனது மனவெட்கத்தையாவது எவ்விதத்தும் பொருட்படுத்தவில்லை. அவள் என் மீது கொண்ட அபிப்பிராயத்தை எவ்விதத்தானும் ஒழிக்கவேண்டு மென்று எண்ணங்கொண்ட நான், மேலும் தொடர்ந்து அதே அமைதியான குரலோடும், இனிய முகத்தோடும் சிறிது நேரம் பேசி முடித்தேன். என் இரக்க மொழிகளைக் கேட்ட அத்தெய்வமகள், 'அன்ப! உன்னிடம் எனக்கு அதிக அன்பு உண்டு; அதுபோல் நீயும் என்னிடம் அன்பு கொள்ளவேண்டும்' என்று யாழிசைத்ததுபோல் இசைத்தாள். நான் எல்லையில்லாக் களிப்பொடு விடைகூறப் போகுஞான்று அவள் தனது கருத்தற்ற விளையாட்டாகிய இளங்குறும்பு தூண்ட, அவள் வைத்து விளையாடிக்கொண்டிருந்த ஒரு முள்ளினை என் முதுகில் பொருத்தினாள். நான் அம்முள்ளினைப் பிடுங்க முயன்று வெட்கத்தோடும் கோபத்தோடும் குதிக்க அதே கணத்தில் எனது தோட்புறம் ஏதோ ஒன்று உறைவதாய் நான் உணர்ந்தேன். அஃது, பதித்த வயிரத்தாலாய எழுத்துக்களால், 'கடவுள் தமது மகள் வாய்மைக்குத் தந்தது' என்று பொறிக்கப்பட்டுள்ள ஒரு கையணி. இதனை யெல்லாம் நான் உணர்வதற்குள் அத்தெய்வமகள் சிறிது சேய்மையிலுள்ள மாதவிப் பந்தரினருகே நின்று, 'கல்லாட! நான் உனக்குத் தகுதியில்லாதபடியாக மிக்க இளமையும் ஒருமைப்பாடும் வாய்ந்தவள். எனினும், நீ என்னை அன்புடன் நேசிப்பையேல், எவ்வித இன்னலு முறாய். இரு; நான் போய் வருகின்றேன்' எனக் கோகிலமேயன்ன குரலினோடு இனிமையாக மிழற்றி மறைந்தாள்"

குறிப்பு:—இதுகாறும் கூறிய இக்கட்டுரையின் உள்ளுறை பொருளாவது, வாய்மை ஒழுக்கத்தையே தமக்கு அணிகலனாகப் பூண்டவர் திருவருளைத் துணையாகப் பெறுவர் என்பதாம்.

இக்கட்டுரையைக் கதைப் போக்காக நோக்குங்கால் புலவர் பெருமானான கல்லாடர்பெருமான் ஓர் தெய்வமகளைக் காணப் பெறுதலும்; அவர் அவளது இணையற்ற இளமையையும் அழகையும் வியந்து, அவள்பால் காதல் கொள்வதும்; அவள் ஓர் கடவுளரிடம் களவொழுக்கம் நிகழ்த்துகிறவள் என்று அவள் நவில அறிந்து அவர் மனம் மிடைதலும்; பின்னர் ஓர் வகையில், அத்தெய்வமகள் அவரிடம் அன்புகொண்டு, மானுடப் பிறவியின் குறைவுகளான நரை திரை மூப்பு முதலியவைகளைத் தம் உடலின்கண் சுட்டிக்காட்ட அவர் நாணமடைதலும்; அவள் கடவுளின் மகள் (அருட்சத்தி) எனப் பிறகு அவர் அறிதலும்; இறுதியாக அவள் 'தன்னிடம்

அன்பு கொண்டவர் துயரமடையார்' என்று அறிவுறுத்தி மறைதலும், இன்னோரன்ன பிறவும் பொதிந்து விளங்கும். பொருட் போக்காகக் கண்ணுறுங்கால் அறக்கடவுள், பொய்யடிமையற்ற ஆன்றோர் ஒருவருக்கு அருள்புரிய எண்ணி, அறத்தின் மாண்பு விளங்கும்படி அவருக்குக் காட்சிகொடுத்து, அவரது அறிவு நுணுக்கத்திற்கு எட்டாது அவரிடத்து அருகிக் கிடந்த பொய்மைகளை எடுத்துக் காட்டி, அவற்றைக் களைந்து வீடு பெறும்படி அவரை ஏவியது என்பதும் பிறவும் மிளிர்ந்து தோன்றும்.

உண்மை நிலையின் அளப்பருஞ் சிறப்பை நோக்குழி, அறவோர்களின் நிலையே பெரிதும் குறைவுபட்டிருக்கிறது என்பதையும்; ஆகவே மற்ற மக்கள் எங்ஙனம் தங்கள்தங்கள் உள்ள நிலையை நுணுகி ஆராய்ந்து மேலுமேலும் அதைத் தூய்மை செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் ஆராய்ந்து உணர்தலே இக் கட்டுரையை ஓதுவார்க்கு உறுபயனும் கடமையுமாமென்பது.

N. துரைக்கண்ணன்.

மதிப்புரை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A., B. L.

ஆங்கிலத்தில் இயற்றியதின்

மொழிபெயர்ப்பு.

தமிழில் மொழி பெயர்த்தது, "கிருஷ்ணிகுமாரி."

மதராஸ் லா ஜர்னல் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூ. **1—8—0.**

சிறிது காலத்திற்கு முன்னிருந்த ரஷ்யா தேசத்து வித்தகர் டால்ஸ்டாய் என்பவர் எழுதிய சிறுகதையொன்றும், ஸர் தாமஸ் மூர் என்னும் ஆங்கிலப் பேரறிவாளர் நானூறு ஆண்டுகளுக்குமுன் வரைந்த 'யுடோபியா' என்னும் நூலிற்கண்ட கருத்தும், தற்கால உத்தியோக வாழ்க்கையிலும் 'வக்கீல்' தொழிலிலும் கண்கூடாகக் காணக்கிடக்கின்ற அநுபவ உண்மைகளும் ஆகிய இவை மூன்றும் ஒன்றாய்த் திரண்டு "முருகன்" என்ற பேரோடு ஆங்கிலத்தில் வெளிவந்த ஸ்ரீமான் கே. எஸ். வெங்கடாமணி எம். ஏ, பி. எல். அவர்களின் நாவல்நூலை, நம் நாட்டிலும் அயல் நாட்டிலும் கல்வியும் அறிவும் வாய்ந்த யாவரும் வியந்து பாராட்டிவருகின்றனர் என்பது உலகறிந்த செய்தியாம். அதனை ஆங்கில மறியாத் தமிழ்மக்கள் இன்புற ஓதிப் பயன்பெறுமாறு செம்பாகமாகத் தமிழில் மொழிபெயர்த்துதவிய ஸ்ரீமதி "கிருஷ்ண குமாரி" அம்மையாரை மனமார வாழ்த்துகின்றோம்.

ஏழை உழவனொருவன் கொண்டுசென்ற உணவு மூட்டையை ஒரு மரத்தடியில் வைத்துவிட்டுப்போய் நிலத்தை உழுத இளைப்போடும் உண்பதற்கு மீண்டபோது, வைத்தவிடத்தில் அச்சோற்று மூட்டை இல்லாதது கண்டு, "ஐயோ பாவம், என்னிலும் பசித்திருந்த யாவனோ ஒருவன் இதனைத் திருடிச் சென்றிருத்தல் வேண்டும். உண்ணட்டும் பாவம் அவன், என் பசியை ஆற்றியிருப்பேன்." என்று பட்டினியிருந்தான். அச்சோற்றினைத் திருடியது ஒரு பூதம். அந்தப் பூதம் அயலே நின்று இந்த ஏழைக் குடியானவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தது. உலகத்தில் இத்தனை நல்லவன் ஒருவன் இருப்பது அதற்குச் சகிக்கவில்லை. எப்படியாவது இவனைக் கெடுத்து விடவேண்டுமென்று எண்ணியது. எண்ணித் தானுமோர் உழவன் உருக்கொண்டு அவனோடு வந்துசேர்ந்து அவனது சிறுவயலில் பெரு விளைவு உண்டாக்கியது—இப்படி இரண்டு மூன்று வருடங்கள் விளையவே, அக்குடியானவன் தனக்கு வேண்டிய அளவிற்குமேல் விஞ்சிக்கிடந்த தானியத்தை உடையவனாயினான். அவனுக்கு அந்தத் தானியத்தை என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தச் சமயத்தில், உறவாடி அருகிருந்த அப்பூதம், மிகுந்திருந்த தானியத்தைச் சாராயமாய்க் காய்ச்சிக் குடிக்கலாம் என்று உபாயம் சொல்லித் தந்தது. அவனும் உடன்பட்டுக் குடியினால் வரும் கேடுகளுக்கு ஆளாகி, வாய்மை அன்பு கண்ணோட்டம் முதலிய நற்குணங்களெல்லாம் அழிந்து, மனிதத்தனமற்று நாயும் நரியும் புலியும் போலாயினான். வயிற்றளவிற்கு மேற்பட்ட பொருளைக் கொடுத்தே பூதம் தன் கருத்தை முடித்துக் கொண்டது.

மேற்சொன்ன இது டால்ஸ்டாய் எழுதிய சிறுகதையின் சுருக்கம். இதனைத்தான் மனதில் வைத்து ஸ்ரீமான் வெங்கடாமணி தன் முருகனைக் கற்பித்தாரோ யாதோ நாம் அறியோம். அலவந்தி கிராமத்தில் காவேரி நதிக் கரையில் உழுதொழில் புரிந்து உத்தமனாய் வாழ்ந்த முருகன், பண்ணை யாளாயிருந்து குத்தகைக்காரனாகி முதலாளியாக முடிந்து பின், டால்ஸ்டாயின் பூதம்போல் தொப்பை என்றொருவன் வந்துசேரக் கள்ளுக்கடையும் வைக்க நேர்ந்து, குற்றத் தண்டனையடைந்து சிறைவாசம் செய்து, அதனின்றுந் தப்பிக் கள்வர் கூட்டத்தில் சேருவானான கதை, உலக இயற்கையும் மானததத்துவமும் அறநெறியில் இடையூறு செய்யும் இக்கால நாகரிகத்தின் தன்மையும் வழுவாது அமைந்திருக்கின்றது.

இந்த முருகனுக்கு முதலில் எசமானாயிருந்தவனும் பிறகு அவனையும் அவன் சேர்ந்திருந்த கள்வர்களையும் நல்வழிப் படுத்தி உய்வித்தவனும் ஆகிய இராமசந்திரன், அரசாங்க உத்தியோகத்தில் தாழ்ந்தவோர் வேலையிலமர்ந்து, தன் அறிவாலும் பொறுமையாலும் உண்மைக் குணங்களாலும் உயர்ந்த பதவியை அடைந்து, அப்பதவிக்கு உரித்தாய செல்வத்தையும் செல்வாக்கையும் ஜனங்கள் பொய்வாழ்க்கை விட்டு மெய்யான வாழ்வினில் மன அமைதியோடு வைகுதற்கு வேண்டியன செய்து உதவி இந்நாவலின் மற்றோர் அங்கமாக, படிப்பவர் கருத்தெலாம் கவர்தற்கொத்த தன்மையோடு, திகழ்கின்றான். பொய்யும் புது நாகரிகமும் விட்டுப் போவாவொடு ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அலையும் துன்பமெலாந் துறந்து, மனவமைதியுடன் எல்லாருமெங்கும் இன்புற்று வாழும்படி நாகலாபுர மலையடிவாரத்தில் ராமு நிறுவுகின்ற சிறு இராச்சியத்தின் அமைப்பும் அதனால் ஆசிரியர் கற்பிக்கின்ற வாழ்க்கைத் தத்துவமும் கொள்கையும் 'கலாநிலயத்திற்கு' முற்றிலும் உகந்ததாகவே இருக்கின்றன. ஜனங்களுக்கு இடையிலே ஆள் கொல்லிக் காசு நடமாட விடாமல் ஆளுக்கு மூன்று

'ஏகர்' நிலமன்றி வேறு உடைமையில்லா வாழ்வமைத்து வைக்கின்ற ராமசந்திரன், ஸர் தாமஸ் மூர் எழுதிய 'உடோபியா' என்னும் நூலின் கருத்துக்களால் இயக்கப்படுகின்றானாயினும், கட்டியது முற்றிலும் ஆகாயக் கோட்டையன்று. சில விஷயங்கள் மிகவும் சுலபமாயிருக்கின்ற காரணத்தினாலேயே சாத்திய மற்றனபோல் தோன்றும். ஆசிரியர் 47-வது அத்தியாயத்தில் வகுக்கின்ற வாழ்க்கைமுறை அத்தகையவைகளில் ஒன்று. லோகாயதச் சுழலில்பட்டு உழல்கின்ற இக்காலத்திற்கு மருந்துபோன்ற அச்சொற்கள் பெரிதும் பயன்படும் என்பதற் கையமில்லை. பணம் என்பது புரளாமல் பட்டினத்தோடு போக்குவரவற்று மூன்று ஏகர் நிலத்தையே நம்பியிருந்தால் விளைவின்றிப் பஞ்சம் உண்டாகுங் காலத்தில் குடிகள் யாது செய்வார் என்ற வினாவிற்கு ஆசிரியர் ராமுவின் நாவைக்கொண்டு,

> "எனது ஏற்பாடு நடைமெறுமாயின், அந்நிலையில் பஞ்சம் விளைவதே மிக்க அருமை. வேலை செய்யும் இயல்பும் சாமர்த்தியமுமுடைய மனிதன், கிணற்றினின்றும் நீரிறைத்துத் தன் பயிர்களை அழியாது பார்த்துக்கொள்வான். ஆயினும் மிகவும் கொடியதான ஓர் பஞ்சத்தைக் கடவுள் விதிக்க, அதனின்றும் உயிர்களைக் காப்பாற்ற நன்றாய் விளையும் மற்றொரு பிரதேசத்தார் முயற்சி யெடுத்துக் கொள்ள விரும்பவில்லை யென்றும் வைத்துக்கொண்டால், கோட்டைக்குள்ளேயே முற்றுகை யிடப்பட்ட போர்வீரனுக்கு நிகராக, உணவற்று உயிர்துறப்பதே மிக்க பெருமை வாய்ந்ததாயும் சந்தோஷகரமானதாயும் இருக்கும்"

என்று கூறுகின்ற வாய்மையில் இருக்கின்ற வீரத்தை மனமுவந்து பாராட்டுகின்றோம். குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி விஷயங்களின் தரத்தை மதிக்க வல்லார் யாவரும், இதனிலடங்கிய மேன்மையை ஏற்றுக்கொள்வார். நாகரிகம் என்ற பேரோடு நாணயத்தின்மீது கட்டிய நரகத்தில் நடைபிணங்களாய் உழல்வதைக்காட்டிலும் அஃதின்றிப் பஞ்சத்தால் செத்தாரே நீடூழி வாழ்பவர் என்று கூறலாம்.

பணம் வந்தடைந்தபின் ஒருவனது நல்வாழ்வு கெடுகின்ற தன்மையை முருகன் உதாரணத்தாலும், பணத்தை முன்வைத்து விவகரிக்காத வாழ்வின் சிறப்பை இராமு தன்னுடைய வாழ்வாலும் பின்செய்யும் சீர்திருத்தத்தாலும் விளக்கினார் எனின், கேடுற்ற வாழ்வை நச்சி அப்பணத்தைச் சம்பாதிக்க முயல்கின்ற நெறியின் தீமைகளை, அவைகளுக்குத் தானே ஆளாகி, எடுத்துக்காட்ட இப்புத்தகத்தில் கேதாரி இருக்கின்றான். வருவாய் விளையவென்று ஊரெங்கும் கடன் விதைக்கும் 'வக்கீல்' இவன். சூழ்ச்சிகளில் தன் அறிவைச் செலுத்தி முன்னுக்குவர இந்த 'ஜூனியர்' வக்கீலும், அவனுக்கு ஸீனியராக இருந்தவரும் பொருட் செல்வம் இருப்பதுபோல் தோன்றுவதல்லாமல், அருட் செல்வமேனும் கலைச் செல்வமேனும் அறவே மரித்துப்போன உள்ளத்தவருமான மார்க்கண்டம் அய்யரும் பலர், பேர்மாத்திரம் வேறுடையவராய் இந்நகரத்திலும் வேறு இடங்களிலும் இருக்கின்றனர். வக்கீல் பிழைப்பின் இழிவைப் பழிக்கும் வன்மையில் நமதாசிரியர் 'சார்லஸ் டிக்கன்ஸிற்குச்' சிறிதும் பின்படவில்லை.

இவ் வக்கீல் தொழிலின் இரகசியத்தை முற்றிலும் அறிந்திராதார் இந்நாள் யாவரேனும் உளராயின் அவர் கேதாரியின் சரித்திரத்தைப் படிக்க மிகவும் ஆச்சரியம் எய்துவார். அத்தொழிலிலேயே இந்நூல் ஆசிரியர் ஸ்ரீமான். வெங்கடாமணியும் அமர்ந்திருக்கின்றாராதலால் உள்ளூற ஊடாடிப்பெற்ற அனுபவ அறிவைக்கொண்டு, மற்றவரை இரைபற்றி வயிறு வளர்க்கவேண்டிய இவ் வக்கீல் சாதியின் தன்மையைக் கைப்புண்ணிற்குக் கண்ணாடி வேண்டா வென்றபடி, காட்ட வல்லவராயினார் போலும்.

முக்கிய அம்சங்கள் இவைகளன்றி, இந்நூலில் வருகின்ற ஜானகி மீனாக்ஷி கோகிலம் சீதை ஆகிய மாதர்களில் காண்கின்ற அமைப்பின் நயமும், கிரீக் நாடக ஆசிரியர்கள் 'கோரஸின்' உதவியைக் கொண்டு நிகழ்ச்சிகளைக் கூறிவைப்பது போலவே, இவ்வாசிரியர், காவிரிக்கரையில் மாதர்கள் கூடிப் பேசிவருகின்ற வம்புகளின் மூலமாய் இடைநிகழ்ந்தனவற்றைத் தெரிவிக்கின்ற அழகும், இப்புத்தகத்தில் நிறைந்திருக்கின்றன. எல்லாப் படியாலும் தற்காலம் பிரசுரமாகும் சிறந்த நூல்களில் இதுவொன்று என்பதற்கு ஐயமிலது. ஓதுவோர் இன்பமொடு அறிவும் பெறுவார்.

இத்தகைய நலங்கள் வாய்ந்து ஆங்கிலத்தில் திகழ்கின்ற நூலை 'ஸ்ரீ கிருஷ்ணகுமாரி' யாவரும் கொண்டாடும்படி அழகிய தமிழில் மொழிபெயர்த்துளார். வாக்கியங்கள் மயக்கத்திற் கிடமற்றனவாய் அமைந்திருக்கின்றன. சிற்சில பாகங்களில் ஆங்கில முதல்நூலிலும் பொருத்தமான சொற்களால் மொழிபெயர்ப்பு விளங்குகின்றது. உதாரணமாக, இராமு சீதையைப் பாழடைந்த கோவிலில் தனியாகச் சந்தித்தபோது அவள் தொழுவதும் தன் நன்றிகூறிப் புகழ்வதும் தமிழ் மக்களுக்குரிய கருத்தாதலால், மொழிபெயர்ப்பில் அவை இயற்கையாகத் தோன்றுவதுபோல் ஆங்கிலத்தில் பயின்று வர நியாயமில்லை.

இப்பதிப்பு விற்றுப்போய்ச் சீக்கிரத்தில் மறுபதிப்பிற்கு அவசியம் ஏற்படும் என்று நாம் நினைப்பதால், அதனில் நீக்குமாறு இப்புத்தகத்தில் காண்கின்ற சில பிழைகளை இங்குக் காட்டுகின்றோம். வறண்ட, என்பதற்கு வரண்ட என்றும் (18பக்கம்) கோத்து என்பதற்குக் கோர்த்து என்றும் (33பக்கம்) சற்று இரு என்பதற்குச் சற்று யிரு என்றும் (42வது பக்கம்), சுவரில் என்பதற்குச் சுவற்றில் என்றும் (239), ஒருத்தி என்பதற்கு ஒருவள் என்றும் (242), செலவழி என்பதற்குச் சிலவழி யென்றும் (320), காத்து என்பதற்குக் கார்த்து என்றும் (289 & 350) சொற்பிழைகள் வந்துள இவையன்றி வல்லினம் பலவிடங்களில் இலக்கண விதிகளுக்கு மாறாக மிகுந்தும் மிகாமலும் இருக்கின்றன. கருத்தையும் வாக்கியங்களின் நேர்மையையும் புத்தகத்தின் பயனையுமே கருதி மதிக்கின்றோமாகையால் இச்சிறு பிழைகளால் நூலின் பெருமை எள்ளளவும் குறைந்திடாது. ஆயினும் ஆசிரியர் தம் முயற்சியாலும் பிறர் உதவியாலும் எளிதில் நீக்கவல்ல இவ்வழுக்களை நீக்கிக் கொள்ளல் நலமாம்.

ஸ்ரீமான். T. S. ராமசந்திர ஐயர், இம்மொழி பெயர்ப்பிற்கு அழகியதோர் முன்னுரை சுருக்கமாகவும் விஷயத்தை விளக்கித்தர வல்லதாகவும் எழுதியுள்ளார்.

தமிழ்ப் பாடம் 44.

நள வெண்பா

(851-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

வெய்ய தரையென்னு மெல்லமளி பைத்தடவிக்
கைபரிக்கொண் டெவ்விடத்துங் காணமல்-ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தா ளினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு. 109.

பொழிப்புரை:—எருமைக் கூட்டங்கள் மெல்லிய கரும்பைத் தின்பதற்கு நாடிப்போகும் விதர்ப்பநாட்டரசனது இலக்குமி அனைய மகள், கொடிய தரையாகிய அவ்விழிந்த படுக்கையைத் தடவித்தேடி எவ்விடத்தும் நளனைக் காணமல் 'ஐயோ' வென்று அரற்றிப்போய் விழுந்தாள்.

குறிப்பு:—கடினமான தரையை மெல் அமளி என்றது வஞ்சப் புகழ்ச்சிபோல் வந்ததாம்.

அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்ரு
துழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 110.

பொழிப்புரை:— களித்திருந்த ஒரு மயிலின்மீது கொடிய வில்லையுடைய வேடனது நெருப்புப் போன்ற அம்பு பாய,அம்மயில் பொறுக்காமல் உழல்வதைப்போல் வீமன்மகள், கூந்தலில் மொய்த்திருந்த வண்டுகள் பறந்தோட ஓடி, இரண்டு குழைகளின்மீதும் அவள் கண்ணீர்த் தாரை பாய, விழுந்தாள்.

வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்—ஏனம்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைத்தலைமே லிட்டு. 111.

பதப் பிரிவு:—வான் முகிலம் மின்னும் வறு நிலத்து வீழ்ந்ததுபோல் தானும் குழலும் தனி வீழ்ந்தாள் ஏனம் குளம்பால் மணி கிளைக்கும் குண்டு நீர் நாடன் இளம் பாவை கை தலைமேல் இட்டு.

அன்வயம் :— ஏனம் குளம்பால் மணிகிளைக்கும் குண்டுநீர் நாடன் இளம்பாவை, கைத் தலைமேல் இட்டு, வான் முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல், தானும் குழலும் தனி வீழ்ந்தாள்.

பதவுரை.

ஏனம் - பன்றிகள் (கிழங்கிற்கு நிலத்தைக் கிண்டும் போது)
குளம்பால் - குளம்பினல்
மணி - இரத்தினங்களை
கிளைக்கும் - சீக்கின்ற (செல்வமும்)
குண்டு - ஆழமான
நீர் - நீர் நிலைகளின் வளப்பமும் பொருந்திய
நாடன் - விதர்ப்பநாட்டரசனுடைய
இளம் - இளமையான
பாவை - பதுமைபோன்ற பெண்,
கை - தன் கைகளை
தலை மேல் - தலையின் மீது
இட்டு - வைத்து,
வான் - ஆகாயத்திலுள்ள
முகிலும் - கருமேகமும்
மின்னும் - மின்னலும்
வறு - வெறுமையான
நிலத்து - தரையில்
வீழ்ந்ததுபோல் - விழுந்ததுபோல
தானும் - அவளும்
குழலும் - கூந்தலும்
தனி - நிகரில்லாததோர் இரக்கத்திற் கிடமாய்
வீழ்ந்தாள் - விழுந்தாள்

விரிவுரை:—தமயந்தி மின்னற்கொடி போன்றும் அவள் கூந்தல் மேகம்போன்றும் இருத்தலால், அவள் கூந்தல்விரிந்த கோலத்தோடு தரையில் விழுந்ததற்கு நிகராகச் சொல்லக்கூடியது இயற்கையில் ஒன்றுமில்லை. ஆதலால், ஆகாயத்தில் இருக்கின்ற கருமேகம்ஒன்று மின்னலோடேகூடத் தரையில்வந்து விழுமாளுல் அந்தத் தோற்றம் எவ்வாறு இருக்குமோ அவ்வாறே இருந்தது தமயந்தி விழுந்தது என்னலாம். ஆனல், மேகம் மின்னிமின்னித் தரையில் வந்து விழுவது ஒருபோதும் நேராது. இப்படி நேராத செயலையேனும் இல்லாத பொருளையேனும் உவமையாய்க் கூறினல் அது இல்பொருள் உவமை அணி ஆகும். இல்லாத விஷயத்தை உவமையாகக் கூறுவதால் இந்த அணிக்கு இப்பெயர் வந்தது. 'மலை நடந்ததென நடந்தான்,' என்பதும் நேராத செயலை உவமையாய்க் கொள்வதால், இல்பொரு ளுவமையணி. "குமுதமே பேசிற்றென்ன இவள் பேசினள்," என்பதும் ஒருபோதும் நேராதவொன்றை உவமையாய்க் கூறுவதாம். பாற்கடலில், "கரிய மால்வரை முளரிக் காடு ஈன்று கிடந்தாங்கு" திருமால் பள்ளிகொண் டிருந்தாரெனப் பிள்ளை பெருமாள் ஐயங்கார் வருணிக்கின்றூர். தாமரைக் காடு பூத்திருந்த ஒரு பெரிய மலை, கடலில் படுத்திருந்ததுபோல் படுத்திருந்தார் என்பது பொருள். கரிய உருவத்தால் மலை திருமாலுக்கு ஒப்பாயது. திருமாலின் இருகண்கள் இதழ்கள் அகங்கை நாபி பாதம் இவை தாமரையை நிகர்ப்பன. தாமரைபோன்ற இவை தன்பால் விளங்கக் கடலில் நெடுமால் படுத்திருப்பதைத் தாமரைபூத்த மலை, கடலில் மிதப்பதற்கு நேராகக் கூறுகின்றூர். மலையில் தாமரை பூக்காது. மலை கடலில் மிதக்கவும் மிதக்காது. அப்படி மலையிலும் தாமரை பூத்து அம்மலையும் கடலில் மிதக்கவும் நேருமாளுல் அத்தோற்றம் எப்படி யிருக்குமோ அப்படி இருந்தது திருமாலின் தோற்றம் என்று ஒருபோதும் நேரக் கூடாததை நேர்வதாகக் கற்பித்து உவமை ஆக்கினமையால் இது இல்பொருளுவமை. சரம்பட்டுச் சாய்ந்திருந்த வாலியின்முன் வில்லும் கையுமாய் இராமன் வருவதைக் கம்பர், "நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதேபோல வந்தான்" என்பர். மேகத்தில் தாமரை பூக்காது. மேகம் வில்லொன்று ஏந்தித் தரையிலே நடந்துவாராது. வருமாயின் இராமன் வந்ததற்கு நிகர். ஆகலின் இல்பொருள் உவமை.

மேல்காட்டிய உதாரணங்களில், மலை மேகம் தாமரை வில் மின்னல் முதலிய பொருள்கள் உண்டு. ஆதலால், இல்பொருள் உவமை என்று எப்படிக் கூறலாம் என்னும் ஐயம் வேண்டா. மலையிலும் மேகத்திலும் தாமரை பூப்பதில்லை. மலையும் மேகமும் தரையில் நடப்பதில்லை. மலை கடலில் மிதப்பதில்லை. மின்னல் மேகத்தோடு தரையில் விழுவதில்லை. எனவே, இல்பொருள், என்னுங்கால் ஒருபோதும் நேராதவிஷயம் அல்லது செய்தி என்று கொள்ள வேண்டும்.

ஆனல் எங்குமே இல்லாத பொருளை அல்லது வஸ்துவை உவமையாகக் கற்பிக்கவும் கூடும். கம்பர் இராமனை "கரு ஞாயிறு போல்பவன்' என்று வர்ணிக்கின்றூர். ஜோதியால் சூரியனுக்கு நிகராயிருக்கின்ற இராமன் நிறத்தில் மாத்திரம் கருமையாயிருப்பதால், கருமை நிறமுள்ள சூரியன் ஒன்று இருக்குமாயின் இராமன் அது போன்று விளங்குகின்றூன் என்று கூறலாம் என்பது இவ்வுவமையின் கருத்து. ஆனல் கருமையான சூரியன் எங்கும் இல்லை; எந்நாளும் இருந்ததில்லை. இதுவும் இல்பொருள் உவமையாம். முன் உதாரணங்களில் வஸ்துக்கள் இருந்தன; ஆனல் அவை உவமையிற் குறித்தபடி நேர்வது இல்லை. இங்குக் கரு ஞாயிறு என்றவொரு வஸ்துவே இல்லை. அவ்விதமே, அதிவீரராம பாண்டியன் தமயந்தியை "உயிர் ஓவியம் நிகர்க்கும் தோகை" என அழைப்பார். உயிருடைய சித்திரம் எங்கு மில்லாமையால் இது இல்பொருள் உவமையணி.

எனவே, ஒருபோதும் நேராத செய்தியேனும், எங்குமே இல்லாத பொருளேனும் கற்பித்து அதனைக் கவிகள் தாம் வருணிக்க வருகின்ற விஷயத்திற்கு உவமையாக அமைத்துக்கொள்கின்ற அழகுடைய திறமையை இல்பொருள் உவமை அணி என்று அழைப்பார். இதற்கு வடமொழியில் அபூத உவமை, என்பது பெயர்.

இந்தச் செய்யுளில் வந்திருக்கின்ற உவமையை வில்லிபுத்தூரார், "தாருங் குழலு மின்னுடனே தலஞ்சேர் கொண்டலென"த் துரோபதை விழுவதை வருணிக்க உபயோகப்படுத்தி இருக்கின்றூர்.

தைய லுயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். 112.

பதப்பிரிவு:—தையல் துயர்க்கு தரியாது தம் சிறகு ஆம் கையால் வயிறு அலைத்து கார் இருள்வாய் வெய்யோனை வாவு பரி தேர் ஏறி வா என்று அழைப்பன போல் கூவினவே கோழி குலம்.

பதவுரை.

கோழி - கோழிகளின்
குலம் - கூட்டங்கள்,
தையல் - (தமயந்தியாகிய) பெண்ணினுடைய
துயர்க்கு - துயரத்தைக்காண
தரியாது - சகியாமல்
தம் - தங்களுடைய
சிறகு ஆம் - சிறகுகளாகிய
கையால் - கையால்
வயிறு - வயிற்றில்
அலைத்து - அடித்துக்கொண்டு,
கார் - கரிய
இருள்வாய் - இருளில்
வெய்யோனை - சூரியனை
வாவு - தாவுகின்ற
பரி - குதிரைகளைப் பூட்டிய
தேர் - தேரில்
ஏறி - ஏறி
வா - (சீக்கிரமாக) வரக்கடவாய்,
என்று - என்று
அழைப்பனபோல் - அழைக்கின்றன போல
கூவின - கூவின.

விரிவுரை:— இந்தச் செய்யுள் தற்குறிப்பேற்ற அணியால் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றது. 130, 488, 528-வது பக்கங்களில் இவ்வணியின் இலக்கணத்தை விரிவாகக் கூறியிருப்பதால் இப்பொழுது அப்பாகங்களை எடுத்து ஓர் முறை படித்துக் கொள்வது நலம். யாமக் கோழிகள் கத்துவது இயற்கையாக நிகழ்வதொன்று. தமயந்தி துயரோடு அங்கு விழுந்திருந்தாலும் இல்லாமற்போனலும் என்றையும்போல் அவை அன்றைக்கும் சிறகை அடித்துக்கொண்டு கத்தித்தான் இருக்கும். ஆனல், கதைக்கு ஒட்டிக் கவி இங்கு அக்கோழிகள் சிறகை அடித்துக்கொள்வதற்கும் கூவுதற்கும் தன்னுடைய குறிப்பை ஏற்றி வைக்கின்றூர். இயற்கையாக அவை தம் சிறகை அடித்துக் கொள்வதைத் தமயந்தியின் துயரத்தைக் காணச் சகியாமல் வயிற்றிலடித் தடித்துக்கொள்வதாகக் கூறுகின்றபடியால் இது ஏதுத் தற்குறிப் பேற்றவணி. அதாவது தானக நிகழ்வதற்குக் கவி தன் கருத்தை யொட்டி ஒரு ஏது அல்லது காரணக் குறிப்பை ஏற்றுவதாம். இனி, ஏதுத் தற்குறிப்பு, இல்புல ஏதுவென்றும் உளபுலவேது என்றும் இருவகைப்படும் என்று முன்னரே (529-வது பக்கம்) சொல்லி இருக்கின்றோம். எந்தக் காரணத்தால் இந்த நிகழ்ச்சி நிகழ்கின்றதென்று கவி குறிக்கின்றூரோ அந்தக் காரணமாவது இருக்குமாயின் அது, உளபுலவேதுத் தற்குறிப்பேற்ற வணியாம். அந்தக் காரணமும் கற்பனையாய், கற்பித்த அக்காரணத்தால் இயற்கையாக நிகழும் ஒரு நிகழ்ச்சிக்கு வேறு காரியம் குறித்தால் இல்புலவேதுத் தற்குறிப்பேற்றவணி.

கோழி சிறகை அடித்துக் கொள்வது இயற்கை. அதனை மாற்றி இங்குக் கைகளால் வயிற்றிலடித்துக் கொள்வதெனக் கூறியபடியால் தற்குறிப்பேற்றம் (1). இனித் தமயந்தியின் துயர்கண்டு ஆற்ருததால் அக்கோழி வயிற்றிலடித்துக் கொண்டதெனக் காரணம் காட்டுவதால் ஏதுத் தற்குறிப்பேற்றம் (2). தமயந்தி காண்பதற்குச் சகியாத நிலையில் இருப்பது உண்மை. ஆதலால், அவளைப் பார்த்துக் கோழிகள் இரங்கக்கூடுமாயின் அவ்விரக்கம்கொள்வதற்குப் புலம் அல்லது இடம் உளது. ஆகையால் உளபுலவேதுத் தற்குறிப்பேற்றம் (3).

இதனையும், முன் 529-வது பக்கத்தில் சொல்லியிருப்பதையும் சேர்த்துப் படித்தால் நடந்த விஷயமாவது, அவ்விஷயத்திற்குக் காரணமா யிருப்பதாவது உண்மையானல் உளபுலவேதுத் தற்குறிப்பேற்றவணியாகும் என்பதும், அவ்விரண்டுமேனும் அவைகளிலொன்றேனும் இல்லையாயின் இல்புலவேதுத் தற்குறிப்பேற்ற வணியாகு மென்பதும் தெளிவாகும்.

இந்தச் செய்யுளில் தற்குறிப்பேற்ற அணிகள் இரண்டு கலந்து தொடர்கின்றன. ஒன்று முன் சொன்னபடி கோழிகள் சிறகடித்துக்கொண்ட செய்தி. மற்றது, அவை கூவினது. யாமக் கோழிகள் கூவுவது இயற்கை. ஆனல், இப்பொழுது அவை கூவினதைச் சூரியனைச் சீக்கிரம் வாவென்று அழைத்ததாகக் கவி குறிக்கின்றூர். ஆகையால் தற்குறிப்பேற்ற அணியாம். ஆனல் எவ்வகைத் தற்குறிப்பேற்ற அணி? தமயந்தியின் துயரைக் கண்டு கூவின என்று சேர்க்கும்போது அது உளபுல ஏதுத் தற்குறிப்பேற்றமாகும். ஆனல் அதனையே, "வெய்யோனை வாவுபரித் தேர் ஏறி வா என்று அழைப்பனபோல்" கூவின என்று சேர்த்துப் பார்த்தால் பயன் தற்குறிப் பேற்ற அணியாகும். இயற்கையாக நிகழ்வதற்கு ஒரு பயன் கற்பித்து நிகழ்வதாகக் கூறுவது

பயன் தற்குறிப்பேற்றம். சூரியன் விரைவில் வரவேண்டும் என்னும் பயனைக் கருதி இக்கோழிகள் கூவி அழைத்தனவெனக் குறிப்பதால் பயன் தற்குறிப்பேற்ற அணியாயிற்று. பயன் தற்குறிப்பேற்றத்திலும் இல்புலம் உளபுலம் என இருவகை யுண்டு என்று சொல்லியிருக்கின்றோம். கோழி கூவும்போது சூரியனை வரவழைக்க வேண்டும் என்னும் பயனைக் கருதிக் கூவவில்லை யாயினும், கூவியதாகிய விஷயம் இருந்தது. இது கூவியதைக்கொண்டு அப்பயனைக் கற்பிக்கக் கவிக்குப் புலம் அல்லது இடம் ஏற்பட்டது. எனவே இது உளபுலப் பயன் தற்குறிப் பேற்ற அணி ஆயிற்று.

இந்தச் செய்யுளில், தமயந்தியின் துயரிற்குத் தரியாது கோழிகள் வயிற்றி லடித்துக்கொண்டன வென்பது ஒன்றும், அவள் துயர் சிறிது ஆறும்படி சூரியனை வாவென்று கூவின என்பது ஒன்றும் ஆகிய இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளில் முதல் கருத்தைக் கம்ப ராமாயணத்தில் கைகேசி சூழ் வினையால் தயரதன் துயருற்றுக் கிடந்த இரவு விடிகின்றதென்று கூறும் செய்யுளிலும் காணலாம்:—

எண்டருங்கடை சென்றயாமமி
யம்புகின்றன வேழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன்
மயங்கிவிம்மிய வாறெலாம்
கண்டுநெஞ்சுக லங்கியஞ்சிறை
யானகாமர் துணைக்கரம்
கொண்டுதம்வயி றெற்றியெற்றிவி
ளிப்பபோன்றன கோழியே.

இச் செய்யுளின் பொருள்:—எட்டாவது சாமக் கடைசியில் கூவுகின்ற கோழிகள், கைகேசியால், வண்டுகள் தங்கிய மாலையை அணிந் மார்பையுடைய தயரதன் மயங்கி விம்மியதை எல்லாம் பார்த்துத் தம் மனம் கலங்கித் தம் அழகிய சிறகுகளாகிய அழகிய இரண்டு கைகளையும் கொண்டு வயிற்றில் அடித்து அடித்துக் கூவின போன்றன.

அகப்பொருள் வரலாறு

(854-வது பக்கத் தொடர்ச்சி)

2-வது : கற்பியல்

[ஏகாந்தமான இளமரக்காவில் இருவரும் எதிர்ப்பட்டு, எதிர்ந்த ஞான்றே அன்னியோன்னிய ஆர்வமுதித்துக் காமம் காழ்கொள, தம்மிற்றாமே களவினிற் கலந்து கூடி, இன்புற்றொழுகாநின்ற தலைமகனுந் தலைமகளும், அவ்வொழுக்கத்தைத் தவிர்ந்து, தலைமகளை மணஞ்செய்துகொடுப்பதற்குரிய தாய் தந்தையர் முதலாயினோர் கொடுப்ப அவளை அவன் வேள்விச் சடங்குகளோடு உற்றார் ஊரார் முன்னிலையில் மணம் புரிந்துகொண்டு, இருவருங்கூடி இல்லின்கண்ணிருந்து பொருள் செய்து, அறம் புரிந்து, போகந்துய்த்து ஒழுகும் ஒழுக்கம் 'கற்பு' எனப்படும்.

கற்பெனப் படுவது * கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.

களவொழுக்கம் முன்னர்ப் பலநாள் நிகழ்ந்து, அதனிறுதியில் நன்மணம் முறையாக முடிந்து பின்னர்க் கற்பொழுக்கம் பலநெறிப்பட்டு நடத்தலும் உண்டு. இப்படிக்கன்றி, களவுக்கூட்டம் முன்னேராமலே ஒருத்தியை ஒருவன் விதிப்படி மணந்து இன்பம் நுகர்ந்து இல்வாழ்க்கையை இனிதாற்றி நிற்கும் நிலையினும், 'கற்பொழுக்கம்' என்று நூல்களிற் சிறப்பித்துக் கொண்டாளப்படும் வரலாறுகள் நிகழ்தலுமுண்டு,

களவின் வழிவந்த கற்பும் பொற்பமை
களவின் வழிவாராக் கற்புமென் றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

என்றார் அகப்பொருள்விளக்க நூலுடையாராதலின். ஆயினும் அஃது இத்துணைச் சிறப்புடையதன்று.

'கற்பு' என்பதற்கு 'கற்பித்த வழியின் ஒழுகல்' என்பது பொருள். அஃதாவது, கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறு வழிபடுக என்றும் இருமுது குரவர் முந்தித் தனக்குக் கற்பித்தபடிக்கும், பிந்தித் தலைமகன், அந்தணரிடத்துஞ் சான்றோர்திறத்தும் ஐயர்பாங்கினும் அமரர் மாட்டும், இவ்வாறு ஒழுகவேண்டுமென்று கற்பித்தபடிக்கும், தலைமகள் ஒழுகுதலும், வேள்வியாசான் அக்னிதேவன் அறிகுரியாக இன்னவாறு நடக்கவேண்டுமென்று மந்திர வகையால் தனக்குக் கற்பித்தபடிக்கும், களவின்கண் உள்ளமோடியவாறு ஒழுகியதுபோல ஒழுகாது வழக்கினும் நூலினும் யாத்த விதிவிலக்குக்களைத் தானே கற்றுணர்ந்தும் தலைமகன் ஒழுகுதலும் ஆகிய இவ்விருவருடைய ஒழுக்கமும் 'கற்பு' எனப்படும்.]

வரைந்து கோடல்.

மணம்பேசத் தலைவனனுப்பிய மூதக்கோர் வந்து கொடுத்த பரிசப்பொருள்களைத் தமர் உவந்தேற்று, மணநேர்ந்து மணநாளையுங் குறிப்பிட்டதை தலைவிக்குணர்த்தப் புகுந்த பாங்கி,

உடுக்குந் தழைகொண்டு வந்தொரு நாள்நம்மை
ஒண்புனத்திற்
கெடுக்குங் கருங்கலை கேட்டவர் கேளிர்தாம்,
பைங்கிளியே,
அடுக்குந் தமரும்நம் அன்னையும் ஊரும்
அறியஇன்றே
கொடுக்கும் பரிசமெல் லாங்கொடுத் தார்நின்
மணங் குறித்தே.

யாழிற் பொலிதரும் இன்சொல்நல் லாய்,எவர்
என்செயினும்
ஊழிற் பெருவலி ஒன்றுமின் றால்இரு
கோட்டொருகைச்
சூழிக் களிறு தொலைத்தவர்க் கேநீ
உரியளென
ஆழிப் புவனம் அறியநம் ஐயரும்
நேர்ந்தனரே.

என்று எம்பலோடியம்பினள்.

அதைக் கேட்ட தலைவி தாங்கலாற்றா உவகையார் கண்ணீர் சொரிந்து தோழியைக் கையாற்றொழுது

* கரணம் - மங்கலச் சடங்கு.

இறைஞ்சி, "எனக்கு இச்சோபனஞ் சொல்லவந்த என் றோழிக்கு இவ்வாறு வணக்கம்போக்குதலை அன்றி யான் செய்யத்தக்க கைம்மாறு யாதுளது ! என்னைப் போல நீயும் மனக்கினிய மகிழ்நனை மணந்து இன்புற்று நீடுவாழ்வாயாக" என்று வாழ்த்திப் பின்,

இன்னா நெறியும், குறியிடை யீடும்,
இசையலரும்,
பின்னாள் இழைக்கும் பெருவெறி யாட்டும்,
பிறர்வரைவும்,
நின்னா குலமுந் தவிர,நெஞ் சே,இன்று
நின்னுயிரை
அன்னார் மணமுற சார்க்கின்ற தால்,நம்
அகநகர்க்கே.

நீ இனிச் சோகமுற்று வாடாதே. நாளை நாம் மீளிமொய்ம்பாம் மீகான்தன்னுடன் மெல்லமளியாகிய நல்வங்கமேறி அருந்துயரென்னும் ஆழ்கடல்கடந்து வின்னாருமின்ப வியன்கரை சேர்தும்." என்று நெஞ்சொடு கூறிக் களுகளுத்தாள்.

மறுநாட்டொடங்கிக் கலியாணத்துக்கு வேண்டிய காரியங்களெல்லாம் விரைவிற் செய்து முடிக்கப்பட்டன. வேடர் பெருமான் பணியால் மறவர்பலர் கூடிச் சுவர்களைப் [1] பூவலூட்டிப் புதுப்பித்து மணமனையைக் கோடித்து, முன்றிலெங்கும் நிரைகால் நெடும்பந்தர்க் கோலி, கீழெல்லாம் புதுமணல் பரப்பி, நாற்புறமும் பீலியுந் தொங்கலும் நாற்றி அழகுபெற அமைத்தார்கள்.

கோடுயர் குன்றக் கோமான்
குமரவேள் அருளாற் பெற்ற
நாடருங் கற்பின் மிக்க
நல்லெழில் நங்கை மன்றல்
ஆடியற் றுடியிற் சாற்றி
அறைந்தபே ரோசை கேட்டு
மாடுயர் மலைகள் ஆளும்
மறக்குலத் தலைவ ரெல்லாம்
மலைபடு மணியும் பொன்னும்
[2] வயவரி உகிருந் தோலும்
கொலைபுரி களிற்றுக் கோடும்
பீலியுங் கொம்புத் தேனும்
தொலைவில்பன் னறவும் ஊனும்
சுவைக்கனி கிழங்குந் துன்ற
[3] சிலையுடை வேடர் கொண்டு
[4] சிலையிடங் குறுக வந்தார்.

மணநாளுக்கு முன்னாள் மணமகனும் தன்சுற்றத்தாருடன் வந்து சேர்ந்தான். அவர்களைத் தலைவியின் தமர் எதிர்கொண்டழைத்து அவர்க்கெனக் குறித்த நன்மனையிற் சேர்த்து விட்டு அகன்றார்கள்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா
அறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை அறியுஞ்
சான்றவர் இனமாக,
வேய்புரை மென்றோட் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்;
பூவெழில் உண்கணும் பொலிகமா, இனியே.
பிரசந் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசந் திகழும்; [5] முருகியம் நீங்கும்; எவர்க்குமுன்னும்
அரசம் பலத்துநின் றாடும் பிரானருள் பெற்றவரிற்,
புரைசந்த மேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே.

என்று அவன்வரவைப் பாங்கி யோடித் தலைவிக்கு அறிவித்தாள்.

அன்று சாயங்காலம் தோழி தலைவனையுற்று வாழ்த்தி, அவனைத் தனித்தழைத்துச் சென்று சற்று மறைந்து நின்று, சிறிது தூரத்தே தன்மணத்தின்பொருட்டுத் தலைமகள் சிலதியலருடன் கூடி தங்குலதெய்வத்தை மலர் தூவிப் பரவி வரம்வேண்டி நின்ற நிலையைக் காட்டினள். தலைவியின் காதன்மையைக் கண்டு உவந்த உள்ளத்தனாய், அவன்

குன்றக் குறவர் காதல் மடமகள்
மன்றல் வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலி செய்த ஈர்நறுங் கையள்;
மலர்ந்த காந்தள் நாறிக்
கலிழ்ந்த கண்ணளெம் அணங்கி யோளே.

என்று தன்னுள்ளே சொல்லிக்கொண்டு தன் மனைக்கு மீண்டான்.

மாறுநாட்காலையில்,

மல்கிய வளங்க ளெல்லாம்
நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம்
ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
பல்பெருங் கிளைஞர் போற்றப்
பராய்க்கடன் பலவு நேர்ந்து
நல்விழா எடுக்க வென்று
நவின்றனன் வேடர் கோமான்.

கடிமணத்திற்குரிய கடிகை வந்துற்றதென்று கணிகர் கூற, மணமகன் மணமகளோடு எல்லாரும் மணமனையி லுற்று இருப்ப மணவினை தொடங்கப்பட்டு,

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் [1] ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை [2] தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
[3] கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கட்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர், [4] புத்தகல் மண்டையர்,
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழா நற்பல உதவிப்
[5] பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
[6] பல்லிருங் கதுப்பின் எல்லொடுங் தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுந்து
பேரிற் கிழத்தி ஆகெனத் தமர்தர
நேரிழை வளைக்கை நெடுந்தகை பற்றி
ஒரிற் கூடி உடன்புணர் வுற்றான்.

(1) பூவல் - செங்காவி அல்லது செம்மண் (2) வயவரி - புலி, (3) சிலை - வில், (4) சிலை-மலை. (5) முருகியம் - முருகனுக்கு வெறியாட்டெடுக்கும்போது அடிக்கப்படும் குறிஞ்சி நிலப்பறை.

1 ஞெமிரி - பரப்பி. 2 தொடரி - தொடுத்து. 3 கோள்கால் - கிரகங்களின் இடம். 4 புதிய அகலமான வாயையுடைய மட்கலம். 5 கொண்டவன், கணவன். 6 இருங்கதுப்பு - கரிய கூந்தல்.

[1] மைப்பறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு [2] புரையோர்ப் பேணிப்
புள்ளுப் புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
[3] சகடம் வேண்டிய துகள்தீர் கூட்டத்து,
[4] கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்,
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ,
வதுவை மண்ணிய மகளிர் விருப்புற்று
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய,
மென்பூ வாகை புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த [5] பயம்பமல் [6] அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணு மணியன்ன மாயிதழ்ப் [7] பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டி,
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்,
தமர்தர நின்னையான் மணங்கொள் தலைநாள்.

என்ற சான்றோர் செய்யுளிற் கண்ட பண்டைக்கால முறைப்படி காணங்களொன்றுந் தவறாது நலமுற நடைபெற்று முடிந்தது.

இல்வாழ்க்கை.

இவ்வாறு மணவிழா முடிந்தபின் நல்லதோர் நாளிலே தலைமகன் தன் மனையாட்டியை உடன்கொண்டு தன்னூருக்குச் சென்று தன் மனையின்கண்ணிருந்து இன்புற்று மகிழ்ந்து, இருவரும் மனமொத்து இல்லறத்தை இனிதாற்றி இருந்தார்கள். புக்ககத்தில் தலைவியின் தனிமையைத் தவிர்க்கும் பொருட்டு உடன் சென்ற தோழி, அவளிடத்து அவன் வைத்துள்ள அன்பின் மிகுதியையும், அவள்மாட்டு அவன் புரியுந் தலையளியையும், அவனே தனக்குத் தெய்வமென்றும், அவனுக்கினியன செய்து அவனை வழிபடுதலே தனக்கு உயர்தவமென்றுங் கடைப்பிடித்தொழுகும் அவளது கற்பின் மேம்பாட்டையும், அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும், சுற்றந்தழுவலும், விருந்தெதிர்கோடலும், வறியோர்க்கீதலுமாகிய நல்லறங்களை நயந்தாற்றி, தற்காத்துத் தற்கொண்டானைப் பேணி அவன் மனைத்தக்க மாண்புடையளாகி விளங்கு மேன்மையையுங் கண்டு வியந்து மகிழ்ந்து,

தெரி[8]யா டகவிதழ்ப் பூங்கொன்றை வேணியும்
தேவியும்போல்
பிரியா துறையப் பெறுகு திரால்பிறை
மானுநெற்றிப்
புரியாழ் கிகர்மொழிப் பூவையும் நீயும்
கலந்தென்றுமே

என்று நான்தொறுந் தெய்வத்தையும் வேண்டி அவர்களையும் வாழ்த்திக் கொண்டிருந்தாள்.

இப்படி இருதிங்கள் கழியத் தலைவியைக் காணவந்த செவிலி இவளுடன் சிலநாள் இங்கே தங்கியிருந்து பின் தன்னூருக்குத் திரும்பி, நற்றாய்க்கு இங்கே தான் கண்டதையுங் கேட்டதையுங் கூறலுற்று,

பொட்டணி யான்நுதல்; போயிறும் பொய்போல்
இடையெனப்பூண்
இட்டணி யான்;தவி சின்மல ரன்றி
மிதிப்பக்கொடான்;
மட்டணி வார்குழல் வையான் மலர்வண்
டுறுதலஞ்சி;
கட்டணி வார்சடை யோன்தில்லை போலிதன்
காதலனே

என்று அவனது காதல் மிகுதியையும்,

அணங்கும் கடவுள் அணிநெடுந் தோரண்ண
லையொழிய
வணங்குங் கடவுள்மற் றொன்றறி யாள்;வரி
வண்டினங்கள்
இணங்குஞ் சுரிகுழல் வல்லியன் னாள்தங்கும்
இல்லதன்றிக்
கணங்கொண் டெழுஞ்சுடர் பட்டறி யாளவன்
காதலனே

என்று அவளது கற்பின் பொற்பையும்,

சீரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையால்
காரியல் வாட்கண்ணி எண்ணகலான், கமலங்கலந்த
வேரியுஞ் சந்தும் வியல்தந் தெனக்கற் பில்நிற்பர், அன்
காரியல் கண்டர் வண்தில்லை வணங்குமக் காவலனே[னே

என்று அவன் அவள்கருத்தைக் கடவாது அவள் பெட்டாங்கொழுகும் பெற்றியையும்,

பானூறடிசிலும் வானூர் கொழுங்குறைப் பாகும்உற்ற
தேனூர் கருனையும் தீம்புளிப் பாகுநின் சேயிழையாள்
ஆனூத அன்பின் அமைத் திமிழ்வாரி அமுதென்றன்பர்
தானூர நல்கி அகமகிழ் கூருந் தகுதியளே.

என்று அவனுக்கு அவள் அடிசிற்கினியாளாய் அமைந்த அதிசயத்தையும், நின்மகள் தன்

கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல் செல்லாதவன் ஈர்ங்களிறே.
மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத்தல்கல் செல்லாது

என்று அவள்கற்பினால் விளையும் நற்பயன்களையும்,

ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்
[அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோன்அருள் பெற்றவரின்,
ஆனந்த வெள்ளம் வற்றாது; முற்றுதிவ் வணிநலமே.

என்று இன்பவெள்ளத்தில் அவர்கள் திளைக்கும் செவ்வியையும் ஆராமைபடக்கூறி, "வேறினிப் பேசுவதென்?

தொண்டின மேவுஞ் சுடர்க்கழ லோன்தில்லைத்
தொன்னகரில்
கண்டனம்மேவுமில்; நீ அவன்;
நின்கொழுநன் செழுமென்
தண்டின மேவுதிண் தோளவன்;
யான்அவன் தற் பணிவோள்;
வண்டின மேவுங் குழலா ளயல்மன்னும்
இவ்வயலே.

உன்மகளுடைய இல்வாழ்க்கை நலத்திற்கொப்பாக உனது இல்வாழ்க்கை நலத்தையன்றி வேறு விளம்புவதற்கில்லை" என்று அன்னைக்குப் பெருமகிழ்ச்சிகூறப் புகழ்ந்துரைத்தாள்.

K. இராமரத்நம் ஐயர்.

1 மைப்பு - ஒளிமழுங்கியிருத்தல். 2 புரையோர் - மேலோர். 3 சகடம் - உரோகிணி நட்சத்திரம். 4 கடிநகர் - மணமனை. 5 பயம்பு - குழி, பள்ளம். அமல் - அடர்ந்து வளர்ந்த. 6 அறுகு - அறுகம்புல். 7 பாவை - அறுகங்கிழங்கு. 8 ஆடகம் - பொன்.

189027

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(843-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால் வள்ளியராவோர் யாவது மறியார். தானஞ் செய்வதற்குத் தாழப்படாதென்று உந்தியவோர் உள்ளத்தின் ஆர்வத்தால் மாவலி, 'உயர்ந்தவர் கொள்க' எனத் தன் வாய்வந்த வாசகத்தை முன் செய்யுளில் மாற்றிக்கொள்ள முயன்றது போன்றே, அதனில் சுக்கிரனைத் தன் குருவென்றும் மதியாது வெள்ளியெனும் பெயரிற்குத் தகுதி கூறிய பரிகசத்திலடங்கியுள்ள வன்சொல்லின் கொடுமையை ஆற்ற முயன்றானென, அடுத்த செய்யுளில்,

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொடி ரந்தவ ரேர்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

[அவரவர் காலம் முடிந்து உயிர் நீங்கினவர்களெல்லாரும் இறந்தவர்கள் ஆகார். எமது தந்தையே, கைநீட்டி யாசித்தவர்கள்தாம், உயிரோடிருப்பினும், வாஸ்தவத்தில் செத்த பிணங்கள் என்று சொல்லத் தகுந்தவர். ஈகையால் ஒருவன் உயிரே துறக்க நேர்ந்தாலும் அவனன்றி வாழ்ந்தவர் என்று சொல்லத் தக்கவர் வேறு யாருளர்.]

என்ற தன் கட்டுரையை, 'எந்தாய்' என அருமை மொழிகளால் அன்னவனை முன்னிலைப்படுத்தி இயம்புகின்றான். கொடையின் மேன்மைத்தன்மையைக் குறிப்பது ஒன்றே மாவலியின் நிலைக்கு இத்தருணம் அவசியமாயிருக்க, அவன் அதனோடு சேர்த்துச்சேர்த்து, "இன்னுயிரேனும் கொள்வது தீது" என்றும், "மாயாது ஏந்திய கைகொடு இரந்தவர் வீந்தவர்" என்றும் ஏற்பதன் இகழ்ச்சியையும் சொல்லிக்கொண்டுவருவதன் காரணத்தைத் திருக்குறளுள் தேடுங்கால் ஒருவாறு அறியலாம். மாவலியின் இச்சரிதத்தைப் பாடும்போது அந்நாடகம், கம்பர் மனமெனும் அரங்கில் எவ்வாறு நிகழ்ந்துகொண்டதென்று தேர்தலருமை. மாவலி 'தந்தனன்' என்றவுடன் வெள்ளி தடுக்குங்காலையில் வாமனன் அவர்களுக்கு அருகே இருந்திருத்தல் இன்றியமையாததே. மற்று அதன்மேல், கொண்டல் நிறக்குறளின் கைதவத் திறத்தைச் சுக்கிரன் மாவலிக்கு எடுத்துரைக்குஞ் சொற்களையும், மாவலி அச்சுக்கிரனை இடித்துரைக்குஞ் சொற்களையும் செவியேற்குமாறு வாமனன் அவர்களுக்கு எதிரே நின்றிருந்தானோ அல்லது அயலே அகன்றிருந்தானோ வென்பதை ஊகிக்கப் புகுவோமாயின், அகன்றிருத்தலே வேண்டுமெனப் புலப்படுகின்றது. ஏனெனில், தன்னுடைய சூழ்ச்சியைச் சங்கையறத் தேர்ந்தும் மாவலி வழங்குவதை வாமனன் உணர்ந்தானென்றால், அவன் செய்யும் வஞ்சனை சுவையற்றதோர் சூழ்ச்சியாகும். குறளுருவக் காலினால் மூன்றடி மண் 'உண்டேல்' அருள் என்று கேட்டவனுக்கு மாவலி, "அண்டமெலாம் உண்டவனே, அளிக்கின்றேன்" என்று ஈவானாயின் வாமனன்தன் மனந்தானும் அதனை ஏற்பதற்கு நாணாது அமைந்திடாது. அதுவுமன்றி மாவலி, "மாயாது ஏந்திய கைகொடு இரந்தவர், எந்தாய், வீந்தவர்" என்ற சொற்கள் வாமனனைக் குறித்து நேராக ஏவிய வசைகளாகும். வள்ளலாகிய மாவலி, ஏற்பவன் இரப்பதால் அடையும் இழிவை இடித்துக்காட்டி அவன் முகத்தைக் கொன்று பின் கொடுப்பதென்னும் கொள்கையை மறந்தும், கனவிலேனும், கையாள நினைத்திரான். நினைத்திருப்பானாயின் அவன் கொடையுமே கொடியது. அவ்வாறு கொடுத்தலின் கொடாமையே நன்று. வாமனன் எதிர்நின்றிருந்தானேனும் பின்னகன்று சென்றானேனும் மாவலி, இரத்தலின் தாழ்மையை இங்குக் கூறுவது மிகையாயிற்று எனினும், திருக்குறளில் தோய்ந்திருந்தகம்பர்தம் மனதில் பிறந்திருந்தானுகையால்இவன் ஈகை, இரவு இரவச்சம் ஆகிய அதிகாரங்களுக்குள் அடங்கி நடப்பவனாயினன். "இரந்து முயிர்வாழ்தல் வேண்டில் பரந்து கெடுக உலகியற்றியான்" என்னுங் குறள் அவனது நினைவிற்கு வந்தது இயற்கையே. வந்தாலும், கொடையின் சிறப்பைக் கூறுவான் ஒருவன் இரக்குமதனின் இறத்தல் அமையுமெனும் இக்கருத்தைக் கூறியது வேண்டாவழிக் கூற்றாயிற்றே என்று எண்ண நேருமாயின், ஈகையைப்பற்றிச் சொல்லவந்த அதிகாரத்தில் வள்ளுவநாயனார் "நல்லாறு எனினும் கொளல்தீது, மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று" எனச் சொல்லியதைக் கருத அமைதி தோன்றும். நல்லதின் நன்மையைக் கூறுங்கால் தீயதின் தீமையையும் உடன் சேர்த்து உரைப்பது யாவருக்கும் இயற்கையாகும்.

முகம்பார்த்து அருள்நோக்கி உற்ற நாணம் மீக்கிளர்தர இலன் என்னும் எவ்வம்பட இரந்து ஒளிமுகமிழந்து நிற்பார், மாயாது இருந்தவரேனும் உடலும் மனமும் செத்தவராவதை உணர்வது அரியதன்று. மற்று, ஈந்தவர்தாமே எப்பொருளில் இருந்தவராவரென்று மாவலி வகுத்தான் என்பதும் சிறிது ஆராய்வதற்கொத்ததே. ஈகையால் வருவது பெரும் புகழாதலால் ஈந்தவர் பூதவுடல் அழிந்ததேனும், அவர்தம் புகழுடம்பு எந்நாளும் நிலவுமென்னும் பொருளில் இச்சொற்களை மாவலி வழங்கினான்என்பது மலிந்தஉரையாகும். வண்மையைப்பற்றிப் பேசுவோர் பிறர் அதன் இலக்கணத்தையும் அதனால் வரும் பயனையும் விரித்துரைக்குங்காலையில் கொடையால் பெறும்புகழை எடுத்துக் காட்டுவது பொருந்துமேயல்லாது, வள்ளலார்தாமே கொடுப்பதால் தமக்கு எய்தும் புகழை ஒரு பொருளாக நினைத்துப் பேசுதல் ஏற்புடைத்தகாது. புகழை நச்சி ஈவதும் கைக்கூலி யன்றெனல் ஒண்ணுமோ. புண்ணியமென்று கொடுப்பதும் குறியெதிர்ப்பு நீர்மையுடைத்து. கேட்போனுக்குக் கேட்டதை அளித்தல் வேண்டும் என்னுமோர் எண்ணந் தவிரப் பிறிதொன்றும் உண்மையாய வள்ளியோர் சிந்தனையில் சேரா. கொடையைப் புரிதற்கு உற்றபொருளை உள்ளுவா ரல்லாது, ஏற்போன் தன்மையையேனும் கொடுப்பதால் தமக்கு வரும் பயன்களையேனும் நினைக்கு நெறி அவர் மனஞ் சென்றிடாது. ஆதலாற்றான், "உள்ளி உள்ளவெல்லாம் உவந்தீயும் வள்ளியோரின் வழங்கின மேகமே" என்று முன் ஆற்றுப்படலத்தின்கண் வந்த இடத்தில், யாக்கைநிலையாமை செல்வந்தங்காமை முதலியவைகளை நினைத்தவராய் இனிக் கொடுப்பதால் வரும் புகழே நிலையாமெனும் எண்ணத்தோடு அளிக்கின்ற வள்ளலர் என்று பொருள்கொள்வது அமையாதென்றும், யாவும் ஈந்தபின்னும் இன்னமும் ஈவதற்குத்

தம்பால் ஏதேனு முளதோவென்று உன்னியுன்னி முடிவில் தம்மையே நல்கி விடுகின்றவர்தாம் வள்ளியோராதலால், உடலைக் கரைத்துருக்கும் மேகத்திற்கு அன்னவரே உவமையாவது பொருந்து மென்றும் கூறினோம்.

ஆதலின், வரையாது நல்கும் வள்ளலர், ஈகையால் தமக்கெய்தும் இம்மைப் புகழையேனும், மறுமை நலங்களையேனும் பயனெனக் கருதிப் பாராட்டிக்கொள்ளல் ஏற்புடைத் தன்றென்பது பெற்றோம். இரப்பவரின் குணத்தகுதியையாதல், அன்னான் உயர்வு தாழ்வு முதலிய 'தன்மையையாதல் தூக்கித்தருதல் அவ்வண்மையோரின் கடனன்று என்பதும் கண்டனம். மற்று, இரவலர் தன்மையும் தகுதியும் கொடுக்கின்ற கருத்தோடு கலப்பதற்குக் காரணம் இல்லையேனும், இலன் என்னும் எவ்வமுற வந்து ஏற்கும் அவர்களின் நிலை அடைந்த இழிவை, அவ்விழவிற்கு நேராகத் தாம் ஈடு செய்யும்பொருட்டு, கொடுப்போர் கருத்துட் கொள்ளல் தக்கதே யாம். தனதுணர்வெலாம் அன்னத்தின் தூதினால் முன்னரே தமயந்தியின்பால் சென்று சேர்ந்திருக்க அதனைத் தேடுவான்போல் பொற்றடந் தேர்மிசைப் பொலிவுடன் நளன் அவள் சுயம்வரத்திற்கு ஏகிய நெறியில், அதே கருமமாய் அவ்வயின் போந்த விண்ணவர் அவனைக் கண்ணுற்று, "உன்னிடத்தில் நாங்கள் வேண்டுவது ஒன்று இருக்கின்றது. அது யாதெனப் பின்னர்க் கூறுவோம். நாங்கள் வேண்டுவதை அளிக்க இசைவாயோ, சொல்" என்று இரந்து நின்றபோது, விண்ணுல காள்பவர் மண்ணுல காள்பவர்மாட்டு வேண்டுவது யாவதா யிருத்தல்கூடும், என்று தேர்தற்கியலாமல் திகைப்படைந்த நிடதர்கோமான், எண்ணியதெல்லாம்,

ஐந்தரு நீழலி னரசு வைகிய
இந்திரன் முதலினோ ரீகென் றென்னுழை
வந்துயர் பெரும்புகழ் வழங்கி னாரிவர்
சிந்தனை மகிழ்வுற வென்கொல் செய்வதே.

[கற்பகமாதிய பஞ்சதருக்களின் நிழலிலே அரசு வீற்றிருக்கின்ற இந்திரனே முதலாய தேவர்கள், என்னிடத்தில் வந்து 'கொடு' என்று கேட்டதனால் தம்முடைய உயர்ந்த பெரும்புகழைத் துறந்துவிட்டனர். இவ்வாறு இழந்துகிடக்கும் இவர் சிந்தனை மகிழ்வடையும்படி யான் இப்பொழுது யாது செய்வது]

என்று இரந்தவற்குற்ற நிலையையன்றி வேறில்லை. இங்குப் 'புகழ் வழங்கினார்' என்பதை, விண்ணவர் தனக்குப் புகழைக் கொடுத்தனர், அதற்குப் பிரதிபலனாகத் தான் ஏதளிப்பது என்று நளன் கருதினான் என்னும் பொருளில் கொள்ளலாகாது. வானவர் புகழ் கழிந்ததற்கு வருந்தினான் அன்றி அப்புகழ் தனக் கெய்தியதைக் கணக்கிட்டிலன். "இரத்தலும் ஈதலே போலும், கரத்தல் கனவிலும் தேற்றாதார் மாட்டு" என்ற திப்பிய குறளிற்கு இணங்க விண்ணவர் புகழை ஈவதுபோலத் தோன்றினும் நளனென்னும் பெருவள்ளல் அப்புகழ் அவரைவிட்டு அகன்றது நினைத்ததல்லால் தன்னையது வந்து எய்தியதைச் சிந்தித்துப் பண்டமாற்றுப் பயின்றவனல்லன்.

மாவலி சக்கிரவர்த்தியும் அன்னவனே. எனின், கொடையால் வரும் புகழுடம்பு நிலைநிற்கு மென்பதை உன்னி, அதனால் வள்ளலர் நிரந்தரமாய் இருந்தவர் ஆவர் என்னும், நினைவு மாவலிக்கு எழுந்த தென்று கொள்வதானால் அஃது அவன் வண்மைக்கோர் இழுக்காகும். மற்று, "வீந்தவரேனும் ஈந்தவரே இருந்தவர்" என்று மாவலி இயம்பியது எக்கருத்தினைக் கொண்டு பிறந்திருத்தல் கூடும் என மதித்தறிய வேண்டுங்காலையில், "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்னும் குறளின் உட்பொருள் அச்சொற்களில் கலந்திருக்கின்றதோவென் றொரு சந்தேகம் ஏற்படுவதாகின்றது. மீண்டும் அப் 'புகழ்' என்னும் அதிகாரத்திலேயே "ஒன்றா உலகத்து உயர்ந்தபுகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" என வந்திருக்கும் திருக்குறளும் 'ஈந்தவரே இருந்தவர்' என்னும் கொள்கைக்குச் சார்பா யிருக்கின்ற தென்பதற்கும் ஐயம் இல்லை. ஆயினும், 'இருப்பவர்' என்னாமல் இருந்தவர், என்று இறந்தகாலத்தில் அச்சொல் நிற்பதால் மாவலி ஈந்து இறந்தபின் எய்துகின்ற புகழ்நிலையை மனத்துட் கொள்ளாமல், இறப்பதன்முன் நிகழ்ந்த வொன்றையே நினைத்துப் பேசினான் என எண்ணுவது தகுதியுடைத்தாம். வாழ்நாள் எல்லை சிறியதேனும் அதனுள் அறந்தலை நின்று ஈகையாதி நற்கருமங்களை ஆற்றினவனே வாழ்ந்தவன் என்றுசொல்லத் தகுந்தவன். இவ்வுண்மைக் கிணங்கியே, வாழவரும் ஒருபிள்ளை வேண்டிய மிருகண்டுமுனிவர், அன்னான் ஆண்டு பதினாறில் மரிப்பதற்கும் உடன்பட்டார். வையத்துள் வாழ்வாங்கு வாழாதவர் நூறாண்டு தம் உயிரைச் சுமந்தே உகுத்தாலும், பிறப்பிற்கும் மரிப்பிற்கும் இடைநின்ற ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டே வந்தனரேயொழிய வாழ்ந்தநாள் ஒருநாள் அவர்களுக்கு வாய்த்ததில்லை. அறத்திலெல்லாம் தலையாய அறமாகச் சான்றோர் நவில்கின்ற ஈகையைப் பயில்வார்தாமே தமதின்னுயிரையுங் கொடுத்து வீந்தாலும், அதுகாறும் அறம் நடத்திவந்த தன்மையால் உலகத்தில் உயிரோடு இருந்து வாழ்ந்தவர் என்னுஞ் சொல்லிற்கு இலக்காவார். பிறர் பிறந்தநாள்முதல் பிணமாய் வளர்ந்து நீண்டதோர் மரணத்தைச் சுமந்துதிரிந்து விதித்த ஆயுளின் இறுதியைச் சேர்பவரன்றி வேறல்லர். வாழ்வின் இலக்கணம் இன்னபரிசு என்பது ஓர்ந்து மாவலி, வீந்தவரேனும் ஈந்தவரன்றி இருந்தவர் இலர், என்று சாற்றுகின்றானல்லாது ஈகையால் வரும் இசையெனும் ஊதியத்தைக் குறியெதிர்கொண்டு தன் வண்மையை அளக்கின்றானென்னல் நேரிதன்று.

ஈதலால் வரும் இசையல்லது உயிரிற்கு ஊதியம் இல்லை என்றும், புகழன்றி உலகத்தில் கெடாது நிற்பது பிறிதில்லை என்றும் பொய்யாமொழி நாயனார் புகன்றிருக்க அவைகளுக் கடங்காது மாவலியின் கூற்றிற்குக் கற்பித்த இப்பொருள் பொருளாமோ என்னும் சங்கைக்கிடமின்றி இம்மாவலி இரண்டு செய்யுள்களிற் கப்பால் திருக்குறளின் சொற்களையே தழுவி அமைத்துக் கொள்வானேனும் அதன் எல்லையைக் கடந்து வளர்கின்ற கொள்கையைக் காண்கின்றோம். பெரியோர் மொழிகளை, உத்தமராயிருப்பவர் தம் கருத்திற்கும் கொள்கைக்கும் ஏற்றவாறு அகன்ற பொருள்படுத்தி அமைத்துக் கொள்ளல் முறைமையே. மாவலியின் திறத்தில் இச்செய்தி நிகழுமாறு செய்கின்ற கம்பர் பெருமையை இனிச்சிறிது நோக்குவோம்.

T. N. சேஷாசலம்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்தஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனாம். டெலிபோன் நெ. 3311.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாறட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. 400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ
வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

மங்கயாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

ɔly to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இந்தியபுகையிரதப் பாதைகளுக்காக இருபத்தெட்டு வண்டித் தொடர் இழுக்கும் பெரிய எஞ்சின்கள் செய்யும்படி ஒரு ஆங்கில கம்பனிக்கு ஒப்பந்தம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

***

வெள்ளத்தினுல் வால்டேருக்கும் தானிக்கு மிடையில் இருப்புப் பாதையில் ஏற்பட்ட சிதைவுகளை ஒழுங்குபடுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் வண்டிகள் ஓட ஆரம்பிக்கும் என்று தெரிகிறது.

***

மராட்டிய பாஷைக்கு ஒரு அகராதி எழுதுவதற்காக ஒரு கம்பனி 25000 ரூபா மூலதனத்துடன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மூலதனம், 25 ரூபாவுள்ள 1000 பங்குகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது.

***

திண்டுக்கல்லுக்கும் பொள்ளாச்சிக்கு மிடையில் புதிதாய்ப் போடப்படும் இருப்புப்பாதை நவம்பர் மாதம் பதினைந்தாம் தேதிமுதல் வண்டிகள் போவதற்குத் தயாராய் இருக்கும் என்று தெரியவருகிறது.

***

ஆப்கானிஸ்தானில் அமீர் அரசாங்க விஷயங்களிலும் கல்வி தேசவிருத்தி விஷயங்களிலும் தமது நாட்டை சீக்கிரத்தில் முன்னேற்றத்துக்குக் கொண்டுவருவதற்கேற்ற வழிவகைகளெல்லாம் மிகவும் துரிதமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

***

அப்கானிஸ்தானில் பெரிய கைத்தொழிற் சாலைகள் அரசாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட விருக்கின்றன. நெசவுச்சாலைகள், கம்பளி நெசவுச்சாலைகள் சர்க்கரை செய்யும் ஆலைகள், காகிதம் செய்யும் ஆலைகள், இன்னும் சிறு எந்திரச்சாலைகள் எல்லாம் ஏராளமான மூலதனம் ஏற்படுத்தி ஆரம்பிக்க விருக்கிறார்கள்.

***

இரண்டு ஆங்கிலேயர் உலகத்தைக் கால் நடையாய்ச் சுற்றுப் பிரயாணம் செய்வதற்குப் புறப்பட்டு ஐரோப்பாவிலிருந்து நடந்து காசியில் வந்திருக்கிறார்கள். காசியிலிருந்து கல்கத்தாவுக்குச் சென்று பின் சீனு ஜப்பான் அமெரிக்கா ஆகியவிடங்களைத் தரிசித்தபின் இங்கிலாந்து செல்ல விருக்கிறார்கள்.

***

ஸ்ரீமான் ஜகதீச சட்டர்ஜி என்பவர் லண்டனில் வேதங்களின் உண்மைப் பொருளையும் இந்து சமயத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார். இவர் நியூயார்க் பட்டணத்தில் வேத ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர். இங்கிலாந்திலும் ஒரு கிளைக்கழகம் ஸ்தாபனம் செய்யும் நோக்கத்தோடு இப்போது அவ்விடம் சென்றிருக்கிறார்.

***

திருவனந்தபுரத்தில் நடக்க விருக்கும் தென் இந்திய சுதேச அரசாங்கக் குடிகளில் மகாநாட்டுக்குச் சர். எம். விச்வேச்வரையா தலைமை வகிப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் சுதேச அரசாங்கங்களும் இந்தியாவின் மற்றப் பாகங்களோடு சேர்ந்து தனித்தனியாய்த் தங்கள் அரசாங்கங்களை அந்தந்தத் தேசத்துக் கேற்றபடி நடத்துவதுடன் தேசமுழுமைக்கும் பொதுவாய் இருக்கும் விஷயங்களில் ஒருதலை அரசாங்கத்துக்குக் கீழ்ப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். சுதேச அரசாங்கக்குடிகள் இந்த விஷயத்தைப் பற்றிச் சரியான வழியில் தங்கள் கிளர்ச்சியை நடுத்துவார்களாஞல் தங்கள் அரசர்களை வழிக்குக் கொண்டுவருவது கஷ்டமல்லவென்பது அவர் எண்ணம்.

***

ஸ்ரீமான் T. R. வெங்கடராம சாஸ்திரியார் 'இந்து விவாக சீர்திருத்தம்' என்னும் விஷயத்தைப் பற்றி திருவல்லிக்கேணியில் சென்றவாரம் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் அவர் முக்கியமாய் எடுத்துக் காட்டிய விஷயம், விவாகம் செய்துகொள்ளுவது பிள்ளைகளைப் பெறுவதற்காக மாத்திரம் என்று தற்காலம் எண்ணுவது தப்பு. விவாகம் செய்வது, தேசத்துக்கும் சனங்களுக்கும் புரியும் ஒரு தொண்டு என்பதை அனேகர் மறந்துவிடுகிறார்கள். விவாகவிஷயமாய்ச் சட்டங்களை ஏற்படுத்துவதைப் பற்றிச் சொல்லி முடிவில் சட்டங்களினுல் உண்டாகக் கூடிய மாறுதல்களை விட சனங்களே இந்த விஷயங்களில் (அதாவது சிறுபிள்ளை விவாகம் விதைவை விவாகம்) சீர்திருத்தங்களைச் செய்ய முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்தினர்.

***

மிஸ்டர் எம். ஏ. ஜின்னு சென்ற வெள்ளிக்கிழமை மேற்குத் தேச பிரயாணம் முடித்துப் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

அவரை இந்திய அரசாங்க விஷயமாய்ப் பிரீபிரஸ் நிருபர் ஒருவர் வினவினதற்கு அவர், நேரு அறிக்கையைப் பற்றி முஸ்லீம் ஒற்றுமை ஏற்படவில்லை என்றும் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஒன்று இன்னும் ஏற்படா திருப்பது தான்தடைஎன்றும், ஆனுல் வெகுசீக்கிரம் இந்தத் தடை முடிவுக்கு வந்துவிடும் என்று தான் முற்றும் நம்புகிறார் என்றும்சொன்னர். முடிவில், இங்கிலாந்திலிருக்கும் அரசாங்கக் கட்சியினில் ஒரு கட்சியாலாவது இந்தியாவுக்கு நன்மை வரப்போகிறதென்று காத்திருப்பது பெரிய மூடத்தனம். இங்கிலாந்தில் அரசாங்கக் கட்சிகளெல்லாம் இந்தியாவைப் பற்றிய விஷயங்களில் ஒரே மனமாகவிருக்கின்றன. ஆனபடியால் இந்தியாவுக்கு நன்மை ஏற்பட வேண்டுமானுல் இந்துமுஸ்லிம் ஒற்றுமையால் தான் ஏற்படவேண்டும் என்று சொன்னர்.

***

இந்திய கவர்ன்மெண்டு சட்டமெம்பராகவிருந்த S. R. தாஸ் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை இரவு காலமானுர். இவருக்குச் சிலநாளாக அசௌக்கியமுண்டாயிருந்து நோய் இன்னதென்று பிடிபடாமல், பின்னுல் சுவாசப் பையில் கட்டி என்று தெரியவந்தது. வெள்ளிக்கிழமை மாலையில் நோய் மேற்கொண்டு அன்று இரவு பத்தரைமணியளவில் உயிர்துறந்தார். இவருக்கு வயது 56. இவர் மனைவி இங்கிலாந்திலிருந்து வியாழக்கிழமைதான் பம்பாயில் வந்திறங்கி யிருந்தார். இவரது தகனக் கிரியைகள் பிரமசமாஜ விதிகளின்படி சனிக்கிழமை நடந்தேறியன.

இவர் 1872-ம் வருஷம் பிறந்தார். இங்லாந்திலேயே சிறுவயதிலிருந்து கல்விகற்று 1894-ம் வருஷம் பாரிஸ்டராய் இந்தியாவுக்கு வந்தார். 1917-ம் வருஷம் வங்காள அரசாங்க நியாய துரந்தராக உத்தியோகம் பெற்று 1922-ல் அட்வக்கேட் ஜெனரலாக அமர்ந்தார். பின் 1924-ம் வருஷம் இந்தியசட்ட மெம்பர் உத்தியோகத்தை வகித்தார். இவருடைய பின்னுள்முயற்சி இந்தியாவில் ஒரு பப்ளிக் ஸ்கூல் ஏற்படுத்தவேண்டும் என்பது.

189027

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)